விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஐப்பசி 20 வெள்ளிக்கிழமை | (05.11.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 322

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சிமெந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## சமாதானப் பேச்சை ஆரம்பிக்க உச்சக்கட்ட முயற்சி

# நோர்வே வெளிவிவகார அமைச்சர் தலைவர் பிரபாவைச் சந்திப்பார்!

## அடுத்தவாரம் வன்னிக்கு வருகிறார்

(கொழும்பு)

**நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் எதிர்வரும் 10 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.**

**இலங்கைவரும். அவர் எதிர்வரும் 11 ஆம் திகதி கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**



இச்சந்திப்பின் போது இடைக்கால நிர்வாக சபை திட்டவரைபின் ஊடாக எவ்வாறு சமாதான முயற்சியை நகர்த்துவது என்பது குறித்து ஆராயப்படவுள்ளதாக நோர்வேயை மேற்கொள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

இச் சந்திப்பை முடித்துக் கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து தலைவர் பிரபாகரனுடனான சந்திப்பின் போது பேசப்பட்ட விடயங்கள் குறித்து விளக்கவுள்ளார்.

பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழி பாலம் அருகே நேற்று மினிபஸ் விபத்து

### 4 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

முகமாலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த மினிபஸ் ஒன்று நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் நாவற்குழியில் தடம்புரண்டது. இச் சம்பவத்தின்போது நான்குபேர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



படங்கள்:ஐங்கரன்

மிக வேகமாக வந்த மினிபஸ் நாவற்குழி பாலத்திற்கு அண்மையில் முன் சில்லு உடைந்து குடைசாய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சுட்டுக் கொலை

### தெஹிவளையில்...

(கொழும்பு)

கொழும்பு தெஹிவளைப் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் நபர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

தயானந்தமூர்த்தி (வயது 45) என்பவரே சுடப்பட்டவர் ஆவார். பிரஸ்தாப நபர் நேற்றிரவு 7 மணியளவில் தெஹிவளையில் உள்ள உணவு விடுதியொன்றில் இருந்த சமயம் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர் முன்னாள் புளொட் உறுப்பினர் என தெரிய வந்துள்ளது. சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### நீர்கொழும்பில்....

இளம்குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினமிரவு இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் காரைநகர் தோப்புக்காட்டைச் சேர்ந்த குமாரவேல் பத்மகுமார் (வயது 27) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப நபர் நீர்கொழும்பு முன்னக்கரை கிராமத்தில் கடந்த ஆறு வருடங்களாக வசித்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ தினத்தன்று ஆட்டோ ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்கள் அவரைச் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### பேலியகொடவில்....

கொழும்பு பேலியகொட பகுதியில் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த நபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நேற்றுப் முற்பகல் 10 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது. துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் வாகனத்தில் தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது நபர் ஒருவர் காயமடைந்துள்ளார். (த-08)

## வேலை பெற்றுத் தருவதாகக் கூறி

# கருணா அணிக்கு ஆள் திரட்டியவர் பொதுமக்களால் நையப்புடைப்பு

### 10 இளைஞர்கள் மீட்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைப்பு

(மட்டக்களப்பு)

கருணா அணிக்கு ஆட்களை திரட்டிக் கொடுக்கும் வேலையில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் நபர் ஒருவர் வெலிகந்த கட்டுவன்வில கிராம மக்களினால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப நபரிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வெலிக்கந்தகட்டுவன்வில கிராமத்திலிருந்து கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் கருணா அணியில் இணைத்துக் கொள்வதற்காக கூட்டிச் செல்லப்பட்ட பத்து இளைஞர்கள் கண்டுபிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதுடன் அவர்கள் தமது குடும்பத்தாருடன் இணைந்துகொண்டனர்.

வெலிக்கந்த கட்டுவன்வில கிராமத்திலிருந்து 15 வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்ட பிரஸ்தாப பத்து இளைஞர்களையும் குறித்த நபர் தொழில் பெற்றுத்தருவதாக கூறி அழைத்துச்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கோமா நிலைக்கு யசீர் அரபாத்



பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் அமைந்துள்ள மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் முக்கிய வைத்தியர்களால் கண்காணிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் பாலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் தற்போது சுய நினைவை இழந்துள்ளதாகத் தெரியவருகிறது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வங்கக் கடலில் தாழமுக்கம்

(கொழும்பு)

இலங்கையின் கிழக்கு வங்கக் கடலில் தாழமுக்கம் நிலைகொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

40 கிலோமீற்றர் வேகத்தில் தாழமுக்கம் நகர்ந்து கொண்டிருப்பதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதனால் ஒரு சில தினங்களுக்கு காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. (த)

## பலதரப்பட்ட விடயங்கள் குறித்து இந்தியப் பிரதமருடன் ஆராய்வு

(நமது நிருபர்)

இலங்கைக்கு நூறுமில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்க இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் ஆகியோருக்கிடையில் நேற்று புதுடில்லியில் நடைபெற்ற சந்திப்பின் போதே கடன் தொடர்பான சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பு மன்மோகன்சிங்கின் வீட்டில் மதியபோசன விருந்துடன் நடைபெற்றது.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் அண்மைக்காலங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் மீன் வளத்துறை, பாதுகாப்பு விவகாரம், கப்பல் போக்குவரத்து, இராணுவ ஒத்துழைப்பு, கடன் உதவி மற்றும் வர்த்தக ஒப்பந்தம் என்பன தொடர்பாக இச்சந்திப்பின்போது விரிவாக

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தனித்தரப்புக் கோரிக்கைக்கு ஆலோசனைச் சபையில் இடம்

### அமைச்சர் பௌசி தலைமையில் ஆராய்வு

(கொழும்பு)

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பு நாளை மறுதினம் அமைச்சர் பௌஸியின் இல்லத்தில் கூடுகின்றது. சமாதானப் பேச்சில் முஸ்லிம்களின் தனித்தரப்புக் கோரிக்கை மற்றும் முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளை இனங்கண்டு தீர்வை முன்வைத்தல் தொடர்பாக ஆராயும் வகையிலேயே முஸ்லிம் கூட்டமைப்பு. கூடவுள்ளது. இதற்கான அழைப்பை அமைச்சர் பௌசி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது கிரனைட் வீச்சு; துப்பாக்கிச் சூடு

### ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸிலிருந்து தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடியிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது நேற்று மாலை இனந்தெரியாத நபர்களினால் கிரனைட் வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற பயணிகள் பஸ்வண்டியொன்றில் பயணம் செய்த நபரொருவர் பஸ்சிற்குள் இருந்தவாறு கிரனைட்டை வீசி துப்பாக்கிப் பிரயோகமும் செய்ததாக ஈ.பி.டி.பி. ஏறாவூர் பொலிஸில் புகார் செய்துள்ளது.

இந்த நபர் பஸ்சை விட்டு இறங்கி தப்பிச் சென்றுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

வீசப்பட்ட கிரனைட் அலுவலகத்திற்கு வெளியே விழுந்து வெடித்தமையினால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# பேச்சுவார்த்தைகளுக்கான தடைகளால் சமாதானம் கைநழுவும் அபாயம் உள்ளது

## அமெ.பிரதி இராஜாங்க செயலாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியாது தொடர்ந்தும் தடைகள் ஏற்பட்டுவருகின்றன.

இதனால் இலங்கையில் சமாதானம் கைநழுவிப்போகும் அபாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் எச்சரித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில், ரிச்சர்ட் ஆர்மிடேஜின் வீடியோ நாடா மூலமான உரை ஒளிபரப்பப்பட்டது.

அவ் உரையிலேயே இத்தகவலை ஆர்மிடேஜ் வெளியிட்டார்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தக் கிடைத்த வாய்ப்பும், நிரந்தர சமாதானமும் கை நழுவிப் போகும் சூழ்நிலை தோன்றியுள்ளது. இதனால் விடுதலைபுலிகள் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு வரவேண்டும் என புலிகளை மீண்டும் கேட்டுக் கொள்வதாக அவர் தெரிவித்தார்.

கடந்த இருதசாத காலமாக இலங்கையில் குறிப்பாக வடக்கு - கிழக்கில் இடம்பெற்று வந்த யுத்த நடவடிக்கைகளினால் 64 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன், பல இலட்சக் கணக்கான மக்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

இது மீண்டும் இடம்பெறாமல் இருக்க விடுதலைப்புலிகள் உடனடியாகப் பேச்சுவார்த்தை மேசைக்கு வரவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவில் யார் ஜனாதிபதியாக வந்தாலும் இலங்கையுடனான உறவில் எதுவித மாற்றமும் கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார். (க-121)

# சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப நல்ல குழந்தைப் பராமரிப்புத் தேவை

ஆரம்பப் பிள்ளைப் பராமரிப்பை பயனுள்ள வகையில் சமூகத்திற்கு அறிமுகப்படுத்துவதன் மூலம், ஆரோக்கியமான செயற்றிறன் கூடிய சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும் என கொழும்பு சுகாதார கல்வி பணியக வைத்திய அதிகாரி டாக்டர் எம்.யோகவிநாயகம் கூறியுள்ளார்.

அண்மையில் யாழ்.மாவட்டத்திலுள்ள பருத்தித்துறை, சாவகச்சேரி, மானிப்பாய், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் கடமைபுரியும் வெளிக்கள சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்களிற்கான மூன்றுநாள் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரம் தலைமையில் சுகாதார சேவைகள் அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் கருத்துரை வழங்கிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

வைத்திய அதிகாரி மேலும் கூறும்போது; இன்று எமது சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. இளைஞர், யுவதிகளிடையே காணப்படும் பிரச்சினைகள் பிரதானமானவை.

இவற்றில் ஆரம்பமாக குழந்தையின் விருத்தி மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியதொன்றாகும். கர்ப்பகாலத்தில் தாயில் ஆரம்பிக்கும் இச் செயல்முறை ஐந்து வயதில் பூரணமடைகின்றது எனலாம். ஏனெனில் பிள்ளையின் மூளை வளர்ச்சி ஐந்து வயதுடன் பூரணமாகின்றது. எனவே அதற்குரிய தூண்டல்களை பிள்ளையுடன் பழகும் சகல மட்ட பிரிவினர்களும் அறிந்திருக்க வேண்டியதாகும்.

இதற்கு சுகாதார உத்தியோகத்தர்களின் பணி மிகவும் அவசியமாகின்றது. மக்களிற்கு அவர்கள் வழங்கும் அறிவுரைகள் மக்களின் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

அததுடன், மக்களுடன் சேர்ந்து அவர்களுக்கு ஏற்ற வகையில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது அவசியம். இத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு கிராமியத் தலைவர்கள், கிராமிய அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் பயன்படுத்தி சிறந்த வகையில் தொடர்பாடலை ஏற்படுத்துவதன் மூலம் வெற்றிகரமாகச் செய்து முடிக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப-252)



**FORUT Campaign for Development & Solidarity**

**An organization promoting alcohol, drug and smoke free environment**

**VACANCIES (2) - Documentation cum Field coordinator**

FORUT, an international NGO working in Sri Lanka since 1982, is inviting applications from qualified personnel to work with the poor and affected population to uplift their living status, by adopting participatory working methods. The candidates are expected to be team workers, who could work with the project teams to increase the efficiency and effectiveness. Each position primarily handles documentation work, and to some extent also field work! priority is given to qualification background for documentation!

| | |
|---|---|
| Minimum Requirements | • Graduate in english or excellend proven command of English and Tamil<br>• GCE(AL/OL) with 5/10 years NGO work in social mobilisation<br>• Excellent proven computer skills<br>• Ability to gather and transmit information and information management<br>• Valid mo- bike riding license<br>• Age 25 - 60 |
| Tasks | • Networking, record keeping and data base management<br>• Produce monthly / quarterly / half yearly / annual reports<br>• Document workshops, seminars and reviews<br>• Capacity build CBOs / Partners and identified vulnerable people with appropriate support |

Vacancies exist in jaffna field offices in chunnakam and Nelliady. Applicants must be willing to accept position in any of the project locations. Positions require some field travel from the office locations. Hence, applicants should be prepared to devote time in field under difficult conditions.
Starting time will be no later than january 1st, 2005. Duration of the contract will be one year with possible extensions depending on availability of funds and staff performance. Only short listed candidates will be called for interview.

Completed application forms should be forwarded to reach **Programme Manager, FORUT, 52, Temple Road, Jaffna on or before 12 th November, 2004.**

(C/672)




## சிறுவிளம்பரம்

### தவறிவிட்டது

மூக்குக்கண்ணாடி, திறப்புக் கோர்வை மற்றும் ஆவணங்கள் அடங்கிய கறுப்பு நிறக் கைப்பை யாழ்.நகர்ப்பகுதியில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் இல.127, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். ரூபா.10.000/= சன்மானம் வழங்கப்படும். **T.P:**021 222 7242

(8977)


## அழகியல் தினவிழா

(பருத்தித்துறை)

நவோதய பாடசாலைத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இன்று வெள்ளிக்கிழமை அழகியல் தினவிழா நடைபெறவுள்ளது.

இவ் விழாவிற்கு மாணவ மன்றத் தலைவி செல்வி நித்திய வைகுந்தநாதன் தலைமை தாங்குவார்.

இதில் வடமராட்சி வலய தமிழ் உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுதாமதி நந்தபாலன் முதன்மை விருத்தினராகக் கலந்து கொள்ளவார். (ப-52)

# காத்தான்குடியில் கைதான இளைஞன் பிணையில் விடுதலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய முஸ்லிம் இளைஞரொருவர் அவரது மோட்டார் சைக்கிளுடன் நேற்று முன்தினம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருடன் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த மற்றுமொரு இளைஞர் பொலிஸார் சோதனையிட முற்பட்ட போது மோட்டார் சைக்கிளை விட்டு இறங்கி தப்பியோடிவிட்டார்.

இவரை கைது செய்வதற்காக அப்பகுதியில் இராணுவத்தின் உதவியுடன் தேடுதல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது சாத்தியப்படவில்லை. தப்பியோடியவரிடம் ஆயுதம் இருந்திருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் உபாலி பத்மசிறி கூறினார்.

கைது செய்யப்பட்ட ஏ.எல். மொகமட் அஸ்மீர் என்ற இளைஞர் நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இவரை ரூபா 10 ஆயிரம் ஆட்பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி எதிர்வரும் 16ஆம் திகதி நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராக வேண்டும் என்றும் கட்டளையிட்டார்.(க)

# போக்குவரத்து கண்காணிப்பு பொலிஸார் உஷார் நிலை

(துன்னாலை)

வீதிப் போக்குவரத்தை கண்காணிப்பதில் குடாநாட்டில் பொலிஸார் உஷார் நிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் தீவக கல்வி அதிகாரி, பல்கலைக்கழக மாணவன் போன்றோர் வீதி விபத்துக்களால் இறந்தமையாலும் அண்மைக் காலமாக விபத்துக்களால் பல உயிர்கள் பலியாகிவருவதாலும் குடாநாட்டுப் பொலிஸார் உஷாப்படுத்தப்பட்டுள்ளனர்.

வடமராட்சியில் வெவ்வேறு இடங்களில் சமாந்தரமாக சைக்கிள் ஓட்டியவர்களும், வீதிகளில் தேவையின்றி சைக்கிள்களுடன் நின்றவர்களுமாக பொலிஸாரால் 20 பேர் கைது செய்யப்பட்டு கடந்த 2 ஆம் திகதி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவ் 20 பேருக்கும், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அரியநாயகம் எச்சரிக்கை விடுத்ததுடன், தலா ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்தும் வரை இவர்களை சிறையில் வைக்குமாறும் உத்தர விட்டார். இதனையடுத்து பெற்றோர்கள் உரிய பணத்தை செலுத்தி பிள்ளைகளை மீட்டனர். (ப-101)

# அரச, தனியார் ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கக்கோரி ஐக்கிய தேசியக்கட்சி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்டவுள்ள வரவு - செலவுத்திட்டத்தில் அரசாங்கம் மற்றும் தனியார்துறை ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டுமென கோரி நேற்று முன்தினம் கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது. அரசாங்க சேவை சம்பள உயர்வு தொடர்பான குழுவின் அமைப்பாளரான சம்பத ராஜீத இவ் ஆர்ப் பாட்டம் தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில்,


நாட்டில் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு ஏற்ப அரச, தனியார் துறை ஊழியர்களின் சம்பளம் 5 ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்கப்படவேண்டுமென்பதை வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.


வரவு - செலவுத் திட்டத்தில் 70 வீதம் சம்பள அதிகரிப்பை வழங்கப்போவதாக கூறும் அரசாங்கம், இந்த சம்பள அதிகரிப்பை வழங்காவிட்டால் போராட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமெனக் கூறினார். (க-8)

# ஆஸிக்கு எதிரான இறுதி டெஸ்ட்

# குறைந்த ஓட்டங்களுடன் இந்தியா

இந்திய-அவுஸ்திரேலிய அணிகளிடையேயான நான்காவதும் இறுதியுமான மும்பாய் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் மழை காரணமாக தாமதமாகவே ஆரம்பமானது. முதல்நாள் பெய்தமழை காரணமாக ஆடுகளம் மிகவும் ஈரலிப்பாக இருந்ததால் மதியத்திற்கு பின்பே ஆட்டம் ஆரம்பமானது.





நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் ராகுல் டிராவிட் தமது அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவுசெய்தார்.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக கௌதம் கம்பீரும், ஷெவாக்கும் ஆட்டத்தை ஆரம்பித்தனர். அணி எண்ணிக்கை 11 ஆக இருந்தபோது ஷெவாக் 8 ஓட்டங்களுடன் மெக்ராத்தின் பந்துவீச்சில் நேரடியாக விக்கெற் வீழ்த்தப்பட்டு ஆட்டமிழந்தார். தொடர்ந்து கௌதம் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ராவிட்டும், டெண்டுல்கரும் ஆட்டத்தைத் தொடர்ந்தபோது மழை காரணமாக போட்டி இடைநிறுத்தப்பட்டது. 4 ஓவர்கள் மாத்திரமே ஆட்டம் நடைபெற்றது.

பின்பு மாலையில் ஆட்டம் தொடர்ந்த போது போதிய வெளிச்சம் இல்லாததால் மின்னொளியில் ஆட்டம் தொடர்ந்தது.

முதல்நாள் ஆட்டமுடிவில் இந்தியா 2 விக்கெற்றுக்களை இழந்து 22 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. டிராவிட் 9 ஓட்டங்களுடனும், சச்சின் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். மக்ராத், கில்லெஸ்பி ஆகியோர் தலா ஒரு விக்கெற்றைப் பெற்றிருந்தனர்.

நேற்று 2 ஆம் நாள் ஆட்டம் தொடர்ந்த போது இந்திய அணியின் துடுப்பாட்டம் மிக மோசமாக இருந்தது. அது 104 ஓட்டங்களுக்கு முதல் இன்னிங்ஸை இழந்தது.

தொடர்ந்து ஆடிய டெண்டுல்கர் 5 ஓட்டங்களுக்கு கில்லெஸ்பியின் பந்து வீச்சில் தனது விக்கெற்றை இழந்தார். லக்ஷ்மன்-9, கைவ்-2, தினேஷ் கார்த்திக்-4, கும்ளே-8, ஹார்பஜன்-14, முரளி கார்த்திக்-7, டிராவிட்-31, உதிரிகள்-13.


பந்துவீச்சில் மெக்ராத் 1 விக்கெற்றையும், கில்லெஸ்பி 29 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெற்றுக்களையும், ஹரிஸ் 16 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை விளையாடிய அவுஸ்திரேலிய அணி சகல விக்கெற்றுக்களையும் இழந்து 203 ஓட்டங்ளைப் பெற்றது. (7)

# மறக்க முடியுமா?

டெஸ்ட் போட்டி ஒன்றில் ஒரு இனிங்ஸில் மூன்று வீரர்கள் 150 ஓட்டங்களுக்கு மேல் பெற்ற சந்தர்ப்பங்களும் கிரிக்கெற் வரலாற்றில் இருப்பதை நீங்கள் அறிவீர்களா?

டெஸ்ட் வரலாற்றில் அத்தகைய நிகழ்வுகள் இருமுறை இடம்பெற்றிருக்கின்றன.



இதில் முதலாவது சந்தர்ப்பம் 1938 ஆம் ஆண்டு லண்டன் ஓவல் மைதானத்தில் இடம்பெற்றது.

இங்கு இடம்பெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி சார்பாக மூவர் முதன் முதலாக இந்தச் சாதனையைப் படைத்தனர்.

முதல் இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 7 விக்கெற்றுக்களை இழந்து 902 ஓட்டங்களைப் பெற்றது.

ஒரு இனிங்ஸில் ஒரு அணி பெற்ற அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாக இச்சாதனை 60 வருடங்கள் வரை முறியடிக்கப்படாது இருந்துவந்தது.

இங்கிலாந்து அணியின் பிரபல வீரர் லென் ஹூட்டன் 364 ஓட்டங்களைப் பெற்றார். அத்துடன் மொரிஸ் லோன்ட் 187 ஓட்டங்களையும், ஜோஹார்ட்ஸ்டா (ஜூனியர்) ஆட்டமிழக்காமல் 169 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதில் மொரிஸ் லோன்டும், ஹூட்டனும் இணைந்து 382 ஓட்டங்களை இணைபாட்டமாகப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போது கிரிக்கெற்றில் நீண்டகாலமாக முதலிடத்தில் இருக்கும் அவுஸ்திரேலிய அணி இப்போட்டியில் 579 ஓட்டங்களால் தோல்வியடைந்தது மிகவும் சோகமான தாகும்.

ஒரு இன்னிங்ஸில் மூவர் 150 ஓட்டங்களுக்குமேல் என்ற சாதனைக்குரிய இன்னொரு அணி இந்தியாவாகும்.

1986-87 ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக கான்பூரில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியில் இந்திய அணி ஏழு விக்கெற் இழப்பிற்கு 676 ஓட்டங்களைப்பெற்றது. இவ்வணி சார்பில் சுனில் கவாஸ்கர் 176 ஓட்டங்களையும், முஹமட் அசாருதீன் 199 ஓட்டங்களையும், கபில்தேவ் 163 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இந்திய அணிபெற்ற இச்சாதனையை இலங்கையணி 10 வருடங்களின்பின் முறியடித்தது.

1997-98ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொழும்பில் இடம்பெற்ற இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் இலங்கையணி உலக சாதனையோடு 6 விக்கெற்றினை இழந்து 952 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த உலக சாதனைக்கான ஓட்ட எண்ணிக்கை பெறுவதற்கு இலங்கையணியின் அதிரடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சனத் ஜெயசூரியாவின் 340 ஓட்டங்களும்



றொஷான் மகாநாமாவின் 220 ஓட்டங்களும் அன்றைய இலங்கை அணியின் உபதலைவர் அரவிந்த டி சில்வாவின் 126 ஓட்டங்களுமே காரணமாக இருந்தன.

இந்த வகையில் மூவர் 150 ஓட்டங்களுக்கு மேல பெற்ற போட்டிகளாக இரு சந்தர்ப்பங்களே சாதனைகளாக உள்ளன.

அத்தோடு இப்போட்டியில் டெஸ்ட் போட்டி ஒன்றில் ஒரு இன்னிங்ஸிற்கான அதிக ஓட்டம், மற்றும் 4 ஆவது விக்கெற் இணைப்பாட்டத்திற்கான அதிக ஓட்டமென்ற சாதனைகளும் நிலைநாட்டப்பட்டன. (7-121)

# விளையாட்டு செய்திகள்

## யாழ். பல்கலைக் கழக அணி சம்பியன்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற 8 ஆவது மினி ஒலிம்பிக் கிறிக்கெற் போட்டியில் யாழ். பல்கலைக்கழகம் சம்பியனாகியது.

நேற்று கொழும்பு பல்கலைக்கழக அணிக்கும், யாழ். பல்கலைக்கழக அணிக்குமிடையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் 116 ஓட்டங்களைப் பெற்று யாழ். பல்கலைக் கழக அணி 4 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி சம்பியனாகியமை இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# சொந்த வாழ்க்கையைக் கேட்காதீர்கள் டென்னிஸ் தொடர்பாகக் கேளுங்கள்

## என்கிறார் ஹெவிட்

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்றுவரும் ஆண்களுக்கான மாஸ்ட்டர்ஸ் டென்னிஸ் தொடரில், அவுஸ்திரேலியாவின் ஹெவிட் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற இரண்டாம் சுற்றுப் போட்டியில், இரண்டாம் நிலை வீரரான ஹெவிட், உலகின் முதல்தர ஜூனியர் வீரரான பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கேல்மான் பஸ்சை எதிர்த்து விளையாடினார்.

பெல்ஜியத்தின் டென்னிஸ் நட்சத்திரம் கிம் கிளைஸ்டர்ஸின் காதலை விலகிக் கொண்டபின், முதன்முறையாக அவர் பங்குபற்றிய போட்டி இது என்பதால் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பு இருந்தது.

அந்த எதிர்பார்ப்பை வீணாக்காது ஹெவிட் 6:3, 7:6 என்ற நேர்செட்களில் எளிதில் வெற்றிபெற்றார்.

போட்டி முடிவடைந்ததும் ஹெவிட்டை ஆக்கிரமித்த பத்திரிகையாளர்கள், டென்னிஸ் தொடர்பாகக் கேட்காது, கிளைஸ்டாஸின் காதல்முறிவு குறித்தே வினாத் தொடுத்தனர். ஆனால் ஹெவிட்டோ, சொந்த வாழ்க்கை பற்றிக்கேட்காதீர்கள். டென்னிஸ்ஸைப் பற்றி மட்டும் கேளுங்கள் என்றார்.

இத்தொடரின் மற்றொரு போட்டியில் ரொமேனியாவின் ஆந்த்ரே பாவல் 7:6, 6:4 என்ற நேர்செற்களில் அமெரிக்காவின் மர்டி பஷ்ஸையும், குரோஷியாவின் இவான் லிஜூபக்கை 6:3, 7:6 என்ற செற்களில் பிரான்ஸின் அர்னாட் கிளிமென்டையும் வென்றனர்.

ஆண்கள் இரட்டையர் முதல் சுற்றுப் போட்டியில் இந்திய மகேஷ் பூபதியும் பெலாரஸ் மேக்ஸ்மிர் ஸையும் நான்காம் நிலை ஜோடியான ரொமேனிய ஆந்த்ரே பாவல், ஷெர்பிய ஜீனத் ஜிமோன்ஜி ஆகியோரை 7:5, 7:6 என்ற செற்களில் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினர்.

இன்னொரு போட்டியில் செக்குடியரசின் ரொம், சிரில் சுக்ஜோடி இந்திய லியாண்டர் பயஸ், செக்குடியரசு டேவிட் ரிக்கின் ஜோடியை 6:3, 6:2 என்ற செற்களில் வென்றது. (7)

# 51 ஆவது படைப் பிரிவு உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

51 ஆவது படைப்பிரிவின் ஆலோசனையின்படி 512 ஆவது படையணியினரால் ஒழுங்குசெய்யப்பட்ட உதைபந்தாட்டப்போட்டியின் ஆரம்பநிகழ்சி கடந்த முதலாம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 51 ஆவது படைப்பிரிவின் உதைபந்தாட்டக் குழுவும், கடற்படையின் மண்டைதீவு உதைபந்தாட்டக் குழுவினரும் கலந்துகொண்டனர்.

51 ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் யூவியல் பெர்னான்ந்து, 512 ஆவது படையணியின் கட்டளையிடும் அதிகாரி கேணல் என்.உடவத்த, யாழ். மேஜர் ஆகியோர் பிரதம அதிதியாக வருகை தந்திருந்தார்கள்.

சுழல்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரனுக்கு, அனுசரணை நிறுவனங்களின் பிரதிநிதியால் விளையாட்டு வீரர்கள் அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர்.

9/14 ஆவது சிங்க படைப்பிரிவிற்கும், 19 ஆவது இலங்கைப் பாதுகாப்புப் படைபிரிவிற்கும் இடையில் முதலாவது போட்டி அந்த மைதானத்தில் நடைபெற்றது.

9/14 சிங்கப் படைப்பிரிவினர் 3:0 என்ற கோல் கணக்கில் 19 ஆவது படைப்பிரிவினரை வென்றனர்.

இதன் இறுதிப் போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி யாழ். பாதுகாப்புத் தளபதியின் தலைமையில் அம் மைதானத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (7)



# பாக் - ஆப்கான் எல்லையில் பின்லேடன்
# இந்திய உளவு விமானம் தகவல்



பாகிஸ்தான் -ஆப்கானிஸ்தான் எல லையில் கார்கள் புடைசூழ பின்லேடன் காரில் பயணம் செய்துள்ளார்.

அவர் தமது வலையில் சிக்க நெருங்கி விட்டதாகவும், அவரை விரைவில் பிடித்து விடுவோம் என்றும் அமெரிக்கா அறிவித் துள்ளது.

அமெரிக்காவில் இடம்பெற்ற செப் ரெம்பர் தாக்குதலையடுத்து சர்வதேச பயங் கரவாதி என பின்லேடன் வர்ணிக்கப்பட்டு வருகிறார்.

அத்தோடு நின்றுவிடாமல் பின்லே டன் பல்வேறு நாடுகளிலும் தொடர் தாக் குதல்களையும் நடத்தி வருகிறார்.

ஆப்கானிஸ்தானில் பின்லேடன் மறைந் திருப்பதாகக் கருதி அவரைப் பிடிக்க அமெ ரிக்க விமானங்கள் அங்கு குண்டுமழை பொழிந்தன. ஆனால் அக்குண்டுவீச்சிலி ருந்து அவரும் ஆபகானின் தலிபான் தலை வர் முல்லா உமரும் தப்பிவிட்டனர்.

அவ்வப்போது வீடியோ ஒளிநாடா வில் தனது பேச்சைப் பதிவுசெய்து அல் ஜெசரா தொலைக்காடசிக்கு அனுபபிஅமெ ரிக்காவை எச்சரித்து வருகிறாா பின்லேடன்.

தற்போது பின்லேடன் பாகிஸ் தான்-ஆப்கான் எல்லையில் பதுங்கியி ருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாக்.இராணுவம் சில மாதங்களுக்கு முன்னர் அப்பகுதியில அதிரடித்தாக்கு தல் நடத்தி அல்-கெய்டா இயக்கத்தின் 2ஆம் நிலைத் தளபதிகள் சிலரைச் சுட் டுக்கொன்றதுடன் சிலரை உயிரோடும் பிடித்துள்ளது. இதனால் பின்லேடன் அங்கு தான் மறைந்திருக்கவேண்டும் என்ற கரு த்து வலுப்பெறுகிறது. அண்மையில் பாக். இஸ்லாமாபாத்தில் உள்ள அல்ஜெசீரா தொலைக்காட்சிக்கு அனுப்பிவைக்கப் பட்ட வீடியோ ஒளிநாடா ஒன்று பின்லே டன் பாக் - ஆபகான் எல்லையில் பதுங்கியி ருப்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இந்நிலையில் பின்லேடன் காரில் சென்றதாகவும் அவரைத் தொடர்ந்து பல கார்கள், வான்கள் சென்றதாகவும் அந் தப் பகுதியில் பறந்த இந்திய உளவு விமா னம் தகவல் தெரிவித்துள்ளது. இரு முறை கள் இவ்வாறு பின்லேடன் சென்றதாவும் அது தகவல் தெரிவித்துள்ளது.

ஆகவே பின்லேடனை நெருங்கி விட்டதாகவும் அவரை விரைவில் பிடிதது விட முடியும் என்றும் அமெரிக்கா தெரி வித்துள்ளது. (7)

## லண்டன் தேம்ஸ் நதியில் தெய்வச் சிலைகள்

(லண்டன்)

பிரிட்டனில் உள்ள தேம்ஸ் நதி யில் துர்க்கை, பிள்ளையார், விஷ்ணு, அனுமான் போன்ற தெய்வங்களின் சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

லண்டன் அருங்காட்சியகப் பெண் அதிகாரியான நிக்கோலா இது குறித்துத் தகவல் தெரிவிக்கும்போது,

தேம்ஸ் நதியில் சமீபத்தில் துர்க்கை, விநாயகர், விஷ்ணு, அனுமான் உள் ளிட்ட சிலைகளும், வெள்ளி மற்றும் தாமி ரத்தால் ஆன இயந்திரங்களும், சுவாமி நாராயணன் படம் ஒன்றும் கண்டெடுக் கப்பட்டுள்ளன. இந்தியாவைச் சேர்ந்த நபா ஒருவரே இவற்றை ஆற்றில் விட டிருக்கவேண்டும். அகல் விளக்கும், ஒரு பானையும் இவற்றுடன் கண்டெடுக்கப்பட் டுள்ளன.

நதிக்கரையில் தர்ப்பணம் செய்த நபா தான் இவற்றை நதியில் மூழ்கவிட்டி ருக்கவேண்டும் எனவும் சந்தேகிப்பதா கவும், கண்டெடுக்கப்பட்ட சிலைகள் 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக் கலாம் எனவும் அவர் கூறினார். (7)

WORLD NEWS உலக தரிசனம்

# "நான் எதற்கும் மசியாதவள்"
# உலக அழகி டயானா ஹேடன்



(மும்பை)

முன்னாள் உலக அழகியான டயானா ஹேடன், 'பொலிவுட்' நடிகையாக அறிமுகம் ஆகிறார். அவர் நடித் திருக்கும் 'அப்பாஸ்' எனும் படம் விரைவில் வெளிவரவிருக் கிறது. இத்திரைப்படம் தொடர்பாக டயானா பத்திரிகையாள ருக்கு வழங்கிய பேட்டி ஒன்றில்,

இந்தியாவில் திருமணம் ஆன ஒவ்வொரு ஆண்களும் மனைவி அல்லாத மற்றப்பெண்களுடன் உறவுகொள்வதைப பற்றியே ஒவ்வொரு வினாடியும் சிந்தித்துக்கொண்டு இருப் பார்கள் என்று குறை கூறி இருக்கிறார்.

'அப்பாஸ்' படமும் இதே கருத்தை மையமாகக் கொண்டது தான் என்று கூறிய ஆங்கிலோ இந்திய அழகியான டயானா, தன்னை வெளிநாட்டு ஜனாதிபதி ஒருவர் உறவுக்கு அழைத்த அதிர்ச்சித் தகவலை யும் வெளியிட்டார்.

பெருந்தொழிலதிபர்கள், பல்வேறு துறை அறிஞர்கள் மட்டுமன்றி சாதாரண மக்களும் தாலி கட்டிய மனைவிக்குத் 'துரோகம்' செய்யும் எண்ணம் கொண்டவர்கள் தான் என்று குற்றம் சாட்டிய டயானா திரை உலக பிரமுகர்கள் மட்டும் இதற்கு விதி விலக்கு என்று கூறியிருந்தார். 'நான் எதற்கும் மசியாதவள்' என்பது சினிமா பெரும் புள் ளிகளுக்கு நன்கு தெரியும் என்பதே அதற்குக் காரணம் என்றும் அழகி டயானா ஹேடன் தம்பட்டம் அடித்துக்கொண்டார்.

இதேவேளை, இந்திய ஆண்கள் பெண் பித்துப் பிடித்தவர்கள் போலவும் கட் டிய மனைவிக்குத் துரோகம் செய்பவர்கள் என்றும் அவர் வெளியிட்ட கருத் துக்குக் கண்டனம் தெரிவித்து டில்லியைச் சேர்ந்த உயர் நீதிமன்ற வக்கீல் ஒருவர் டயா னாவுக்கு அழைப்பாணை அனுப்பி இருக்கிறார்.

டயானாவின் கருத்து தனது நண்பர்களின் மனைவிகளிடம் பாதிப்பை ஏற் படுத்திவிட்டதுடன் தனது திருமண வாழ்விலும் கீறலை ஏறபடுத்திவிட்டதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

தனது கருத்துக்காக 3 நாட்களுக்குள மன்னிப்புக் கேட்காவிட்டால் நஷ்டஈடு கோரி டயானா மீது அவதூறு வழக்குத் தொடரப்போவதாகவும் அந்த அழைப்பாணை யில் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

தனது படத்துக்கு மலிவான விளம்பரம் தேடிக்கொள்வதற்காகவே இப்படி ஒரு பேட்டியை டயானா அளித்து இருப்பதாகவும் அந்த வக்கீல் குற்றம் சாட்டியிருக் கிறார். ஆனால் டயானாவோ "வக்கீலின் அழைப்பாணை இதுவரை தனக்கு வந்து சேர வில்லை" என்றார்.

அத்தோடு "நான் ஏற்கனவே கூறிய கருத்துக்களில் இப்போதும் உறுதியாக இருக்கிறேன். இந்திய ஆண்கள் பற்றி. நான் சொன்னது அனைத்தும் உண்மையே. ஒவ் வொரு சராசரி இந்திய ஆண்களும் இதை ஒத்துக்கொள்வார்கள்" என்று டயானா ஹேடன் கூறியிருக்கிறார். (7)



தமிழ்நாட்டின் புதிய கவர்னர் பர்னாலாவின் பதவி ஏற்பு வைபவத் தின்போது, அவரது மனைவி கவுர், மற்றும் முதலமைச்சர் ஜெயலலிதா, தலைமை நீதிபதி சுபாஷன்ரெட்டி ஆகியோர் தோன்றும் காட்சி

# ஆப்கான் அதிபர் தேர்தலில் ஹமீத் கர்சாய் வெற்றி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் ஹமீத் கர்சாய் 55.4 சத வத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள் ளார்.

தலிபான்களின் பிடியிலிருந்த ஆப் கானிஸ்தானைக் கடந்த 2001ஆம் ஆண்டு அமெரிக்கப் படைகள் விடுவித்ததையடு த்து இடைக்கால அதிபராக ஹமீத் கர்சாய பதவி வகித்து வந்தார்.

கடந்த மாதம் 9ஆம் திகதி முதன் முறையாக ஆப்கானிஸ்தானில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெற்றது. இதில் தற்போதைய அதிபர் ஹமீத் கர்சாய்க் கும், முன்பு ரஷ்யா படையெடுத்த போது அதை எதிர்த்துப் போராடிய தஜிக் படைப் பிரிவு கொமாண்டர் யூனுஸ் குவானுனிக் குமிடையில் நேரடிப் போட்டி நிலவியது.

தேர்தலில் முறைகேடுகள் நடந்த தாகக் கூறி யூனுஸ் குவானுனியின் ஆதர வாளர்கள் ஆரம்பத்தில் வாக்கு எண்ணிக் கையைப் புறக்கணித்தனர்.

பின்னர் ஆப்கான் - ஐ.நா. கூட்டு தேர் தல் ஆணைய அதிகாரிகள மேற்கொண்ட சமாதானத்தை ஏற்று வாக்கு எண்ணிக்கை புறக்கணிப்பை யூனுஸ் வாபஸ் பெற்றார்.

இந்துகுஷ் மலைப்பகுதிகளில் பதி வான வாக்குப் பெட்டிகள வந்துசேர கால தாமதமானதனால் வாக்கு எண்ணிக்கை முடிவடைய பல நாட்கள சென்றன. வாக்கு எண்ணிக்கை முடிந்து நேற்று முன்தினம் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

அதிபர் ஹமித் கர்சாய் மொத் தம் 55.4 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றதாக ஆப்கான் - ஐ.நா கூட் டுத் தேர்தல் நிர்வாகம் நேற்று முன்தினம அறிவித்திருந்தது (7).



மேட்டுப்பாளையம் அண்மையிலுள்ள கல்லார் அடர்லி ரெயில்நிலையம் அருகே மண்சரிவு ஏற்பட்டுள்ளது. ரெயில் பாதையில் பாறைகள் விழுந்து கிடப்பதைப் படத்தில் காணலாம்.

# அமெரிக்காவின் ஜனாதிபதியாக மீண்டும் ஜோர்ஜ் புஷ்

(நியூயோர்க்)

அமெரிக்க ஜனாதிபதி யாக ஜோர்ஜ புஷ் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவரை எதிர் த்துப் போட்டியிட்ட கெரியைவிட 35 லட்சம் வாக்கு வித்தியாசததில் புஷ் வெற்றி பெற்றார்.

மொத்தம் உள்ள 538 தேர் தல் சபைகளில் 274 சபைகளில் புஷ்ஷும் 253 சபைகளில் கெரி யும் வெற்றி பெற்றனர்.

ஓகியோ மாநிலத் தேர்தல் முடிவுகள் சர்ச்சைக்குரியதானவை யாக இருந்ததால புஷ்சின் வெற்றி உறு திப்படுத்தப்படுவது தாமதம் அடைந்தது. அதுவரை கெரி தனது தோல்வியை ஒப் புக்கொள்ளவில்லை.

இறுதியில் தனது தோல்வியை ஒப்புக கொண்ட கெரி தொலைபேசிமூலம் தனது வாழ்த்தை புஷ்ஷுக்குத் தெரிவித்தார்.



தனது வெற்றியைத் தொடர்ந்து ஜனாதிபதி புஷ் நாட்டு மக்களுக்கு உரை யாற்றினார்.

புதிய ஜனாதிபதிக்கு பிரிட்டன் பிரதம மந்திரி ரொனி பிளேயர் உட்பட பலநாட்டு அரசியல் தலைவர்களும் தமது வாழ்த் துக்களைத் தெரிவித்தனர். (7)

# மீள்பார்வை

# ஈழத் தமிழர் இறைமை

**அத்தியாயம்-3**
**தொடர் - III**

**மு. திருச்செல்வம்**

ஒலிவேரா மீண்டும் தூதனுப்பினான் திறை கொடுக்க மறுத்த சங்கிலி மன்னன், ஒலிவேராவின் படைகளுக்குரிய பொருட்கள் வாங்கப் பணம் கொடுக்கச் சம்பதித்தான். அதற்கும் ஒரு நிபந்தனை.

பணத்தை வாங்கியதும், நகரில் பொருட்களை வாங்கிக் கொண்டு ஒலிவேராவின் படைகள் அனைத்தும் குடாக்கடலைத் தாண்டிப் பூநகரிக்குப் பின் வாங்க வேண்டும்.

## ஒலிவேரா நிபந்தனையை ஏற்றுக்கொண்டான்

ஐயாயிரம் 'பகோடாஸ்'களைக் கொடுக்கச் சங்கலி மன்னன் சம்மதித்தான். அதன்படி ஒலிவேராவிடம் பணத்தை அனுப்பினான். சங்கிலி மன்னன் தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றினான். ஒலிவேரா சொல்லைக் காப்பாற்றினானா?

இல்லை! ஒலிவேரா சொன்ன சொல்லைக் காப்பாற்றவில்லை. பணத்தை வாங்கிய பின் பூநகரிக்குப் பின் வாங்க மறுத்தான். தமிழ் ஈழ அரசின் துரோகிகளின் உதவியுடன் தொடர்ந்தும் குடாநாட்டிலே தங்கினான். படைகளுடன் வண்ணார்பண்ணையை நோக்கி முன்னேறினான்.

சங்கிலி முரசறைந்தான். போர் முரசறைந்தான். படைகளை அணிவகுத்தான். வருணகுலத்தானின் படைகளையும் தயார் நிலைக்குக் கொணர்ந்தான். மானம் காக்க முனைத்த மறவனாம் மன்னனுக்கு உறுதுணையாகப் போரிட மக்கள் திரண்டனர்.

சங்கிலி போருடை அணிந்தான். போர்க் குதிரையில் அமர்ந்தான். ஏந்திய வாளுடன் வீரமாகாளி அம்மன் கோவிலுக்குச் சென்றான். வெற்றி காணும் உறுதி - வெற்றி அடையும் திண்மை- தமிழரின் மானம் காக்கும் வலிமை - தனக்கும் தன் வீரர்க்கும் - இவை கேட்டு வீரமாகாளி அம்மனிடம் வழிபட்டான்.

## வண்ணார்பண்ணைப் போர்

பூநகரியை நோக்கிப் பின் வாங்குவோம் என உறுதி கூறியவர்கள், சொல்லை மீறினார்கள், ஏமாற்றினார்கள், தந்திரோபாயம் செய்தார்கள்.

தமிழர்களோடு ஒப்பந்தங்கள் செய்பவர்கள், தமிழர்களை எப்பொழுதும் ஏமாற்றியே உள்ளார்கள். மாற்றானையும் நம்பும் பண்பு தமிழரில் மேலதிகமாக உண்டு. இதனால் தமிழர்களை ஏமாற்றுவது எளிதாக இருந்தது. தமிழர்கள் தம் சொல்லை காப்பாற்றியுள்ளார்கள்.

பின்வாங்கவேண்டிய படைகள் முன்வாங்கிக்கொண்டு வண்ணார்பண்ணையை நோக்கி வந்தன. வண்ணார்பண்ணையைப் போர்க்களமாக்க சங்கிலியன் முடிவு செய்தான்.

முதலில் சிங்கள கூலிப்படைகள் வந்தன. இவற்றை சங்கிலி மன்னனின் உள்ளூர் படைகள் சந்தித்தன. சிங்களப்படைகளை புறமுதுகுகாணச்செய்தன.

போரின் வேகம் அதிகாரிக்க அதிகாரிக்க சங்கிலியன் வெற்றி பெறுவது சாத்தியமாவது போல் அமைந்தது.

பேரின் நிலை குறித்து தஞ்சை மன்னனுக்கும் கண்டி மன்னனுக்கும் செய்தி அனுப்பினான். கண்டி மன்னன் எவ்வித உதவியும் வழங்கவில்லை. ஒல்லாந்தப் படைகள் எந்நேரமும் வரலாம் என எதிர்பார்த்தான். டொம்பீதுறுவின் கடற்படை வருவதற்குரிய காலம் இது வென செய்தி அனுப்பினான்.

பிற முதுகுகாட்டி ஓடும் சிங்களக் கூலிப்படைகளை கண்டு ஒலிவேரா துணுக்குற்றான். [illegible]ன்னாரில் இருந்த கடற்படைக்குச் செய்தி அனுப்பினான். நாகப்பட்டினத்துக்கும் கொழும்புக்கும் செய்திகள் அனுப்பினான்.

ஊர்காவற்றுறையில் இருந்துகொண்டே சில போர்த்துக்கேயப் படைத்தலைவர்கள் காக்கை வன்னியனுடன் கதைத்தனர். தந்திரோபாயங்கள் செய்தனர். நேரடிப்போரில் சங்கிலி மன்னனை வெல்ல முடியாது. போரின் கால எல்லையும் நீடிக்கும். சங்கிலி மன்னனை சிறைப்பிடித்தால் தமிழர் படை சீர் குலைந்து விடும் இவ்வாறு திட்டம் போட்டனர். காக்கை வன்னியனை இத்திட்டத்தில் ஈடுபடச்செய்தனர். சங்கிலி மன்னன் சிறை பிடிக்கப்பட்டால் காக்கை வன்னியனை போர்த்துக்கல் அரசின் கீழ் உள்ள தமிழ் ஈழ அரசின் ஆட்சித் தலைவர் ஆக்குவதாகக் கூறினார்கள்.

காக்கை வன்னியன் துரோகம் செய்ய முற்பட்டான். தனது இனத்தை விற்க முன்வந்தான். தனது நன்மைக்காக தமிழ் இனத்தை அதன் மானத்தலைவனை விற்றக முன்வந்தான். தமிழ் ஈழ அரசைக் கலைத்து நாட்டை அடிமைநாடாக்க ஒப்புக்கொண்டான்.

தமிழர்க்குத் துரோகிகள் தமிழர்களுக்கிடையே இருந்தமையால் தான் தமிழர்கள் அடிமை வாழ்வு வாழ நேரிட்டது. இது வரலாற்று உண்மை.

சங்கிலிய மன்னனின் படைகள் போர்த்துக்கேய படைகளை பிறமுதுகாண வேண்டிய காலம் நெருங்கிக்கொண்டிருந்தது. போர்த்துக்கேயப்படைகள் உணவு முதலிய அடிப்படைத் தேவைகட்காக அல்லல் உற்றனர். இழந்த ஆயுதங்களை மீட்க நெடுந்தொலைவில் இருந்து வரும் மீட்புப்படையை எதிர்பார்த்திருந்தனர்.

இந்த நேரத்தில் தான் காக்கை வன்னியன் புறப்பட்டான். காக்கை வன்னியனின் செயற்பாட்டை யாழ்ப்பாண வைப்பவ மாலையில் விரிவாக காணலாம். மாற்றுடையில் தமிழ்ப்படைகள் ஊடே சென்றான். சங்கிலி மன்னனின் பக்கம் சேர்ந்து போராட விருப்பம் தெரிவித்தான்.

காக்கை வன்னியனும் மனம் மாறினான் " உட்பகையின் பலம் குறைந்ததே!" எனச் சங்கிலி மன்னன் மகிழ்ந்தனன். காக்கை வன்னியனை கட்டித் தழுவினன் "இப்பொழுது தான் உன் மனதில் என் மேல் தயவு புறந்து எனக்கு உதவி செய்ய வந்தாயே " எனக் கேட்டான் .

தழுவிய மன்னனை கொழுவிய சிக்குப்போல் காக்கை வன்னியன் பிடித்துக்கொண்டான் விடுவதாக இல்லை. காக்கை வன்னியனுடன் மாற்றுடையில் வந்த ஏனையோர் சங்கிலி மன்னனை பிடித்துக்கொண்டனர். தனது படைகளால் காப்பாற்றப்படமுன்பே சங்கிலி மன்னன் சிறைப்பிடிக்கப்பட்டான்.

சங்கிலி மன்னன் சிறைப்பிடிக்கப்பட்டான் என்ற செய்தி காட்டுத்தீபோல் தமிழ் ஈழம் எங்கும் பரவியது. மக்கள் அழுதனர். மானங்காத்த தலைவன் மாற்றானின் சிறைக்கோட்டத்தில் கொடுமைக்கு உள்ளாக்கப்படுவது பற்றி எண்ணினர் சங்கிலி மன்னனை சிறை மீட்க ஆயத்தம் செய்தனர்.

தமிழ் ஈழ மண்ணில் சங்கிலி மன்னன் இருந்தால் ஆபத்து என உணர்ந்த போர்த்துக்கேயர் அவனை இரவோடு இராவாக கொழும்புக்கு அனுப்பினர். டி.மோத்தா என்ற போர்த்துக்கேய படைத் தலைவனின் கண்காணிப்பில் சங்கிலியும் அவனது இரு மருமக்களும் கொழும்புக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

(தொடரும்)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான பிறிமா கிறீன் மா கேள்வி கோரல்**
**ஜீலை, ஒகஸ்ட், செப்ரெம்பர், ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர். - 2004**

01. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அளவிலான மெற்றிக் தொன் பிறிமா கிறீன் மா விநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவ[illegible]ரிட மிருந்து கோரப்படுகின்றன. மாவை பின்வரும் [illegible]டிப் [illegible]யில் விநியோகம் செய்யப்படல் வேண்டும்.

| விநியோகிக்க வேண்டிய தொகை | விநியோகிக்க வேண்டிய இறுதித் தினம் |
|---|---|
| 3000 MT | நவம்பர் 25 |
| 5000 MT | டிசெம்பர் 10 |
| 2500 MT | டிசெம்பர் 20 |
| 2500 MT | டிசெம்பர் 25 |

கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2004.11.05 ஆம் திகதி தொடக்கம் 2004.11.24ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப.10.00மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

02. கேள்வியை சமர்ப்[illegible]பதற்கு பந்தி 01இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உ[illegible]வர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள் முறி - Bid Bond) மெற்றிக் தொன் ஒன்றிற்கு (01MT.) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும். விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

03. கேள்விப்பத்திரத்தில் கோரப்பட்ட முழுத் தொகையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வது என்பது தேவைக்கேற்ப அரச அதிபரால் தீர்மானிக்கப்படும்.

04. பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச்சபை , மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004.11.24 ஆம் திகதி பி.ப. 2.00மணிக்கு முன்பாக சேர்க்கவும். [illegible]றைய தினம் பி.ப.2.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

05. நீள தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "பிறிமா கிறீன் மா வழங்கலுக்கான கேள்வி" என எழுதப்படவேண்டும்.

06. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக - PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

*செ. பத்மநாதன்*
தலைவர் /அரச அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை /மாவட்டசெயலகம்,
யாழ்ப்பாணம்.

(C/673) 04.11.2004

# தமிழீழ மீட்புநிதி மீளப்பெறுவோர்

## சங்கானை உதவி அரச அதிபர் பிரிவு

01. யா/ச/43 திரு. பொன்னையா தெய்வேந்திரம்
02. யா/ச/45 திரு. தம்பினாதபிள்ளை சண்முகம் தம்பையா
03. யா/ச/52 திரு. இராமுப்பிள்ளை பொன்னையா
04. யா/ச/72 திரு. செல்லர் நவரத்தினம்
05 யா/ச/125 திரு. செம்பொற்சோதி தனபாலசிங்கம்
06. யா/ச/134 திருமதி. மகேஸ்வரி அருணாசலம்
07. யா/ச/175 திரு. குழந்தைவேலு இரத்தினம்.
08. யா/ச/198 திரு. தம்பிப்பிள்ளை கோவிந்தசாமி
09. யா/ச/205 திரு. மயில்வாகனம் வேலுப்பிள்ளை
10. யா/ச/220 திரு. செல்லையா இராசஇரத்தினம்
11. யா/ச/222 திரு. நாகலிங்கம் இராமநாதன்
12. யா/ச/308 திரு. பஸ்தியாம்பிள்ளை விராசிப்பிள்ளை பிரான்சிஸ்
13. யா/ச/327 திரு. ஆறுமுகம் நடராசா
14. யா/ச/335 திரு. கந்தையா நாகேந்திரம்
15. யா/ச/343 திரு. மூத்ததம்பி ஜெயச்சந்திரன்
16. யா/ச/472 திரு. முத்து இரத்தினம்
17. யா/ச/522 திரு. அப்பாக்குட்டி முத்துத்தம்பி
18. யா/ச/534 திரு. வயிரமுத்து சோமசுந்தரம்
19. யா/ச/601 திரு. சுப்பிரமணியம் நடராசா
20. யா/ச/619 திருமதி. தவமணி பாலசிங்கம்
21. யா/ச/670 திரு. சின்னக்குட்டி கந்தையா
22. யா/ச/688 திரு. செல்வநாயகம் ஜெயராசா
23. யா/ச/691 திருமதி. பவளரட்ணம் சுப்பிரமணியம்
24. யா/ச/709 திரு. சிவசம்பு பூலோகசிங்கம்
25. யா/ச/729 திருமதி. கனகம்மா சுந்தரமூர்த்தி
26. யா/ச/769 திருமதி. பவானியம்மா சுப்பிரமணியம்
27. யா/ச/782 திரு. சின்னக்குட்டி கந்தையா
28. யா/ச/79 திரு. கந்தையா மதியாபரணம்
29. யா/ச/826 திருமதி. சரஸ்வதி சரவணமுத்து
30. யா/ச/918 திரு. வைரவி வேலுப்பிள்ளை
31. யா/ச/987 திரு. காலிங்கராயன் செல்லப்பா
32. யா/ச/1014 திரு. கதிரேசு குமாரசாமி
33. யா/ச/1084 திரு. நாகலிங்கம் சிவசுப்பிரமணயம்
34. யா/ச/1094 திரு. முருகேசு அம்பலவாணர்
35. யா/ச/1111 திருமதி. மல்லிகாதேவி சுருளிமலைராசா
36. யா/ச/1132 திரு. நாகநாதர் செல்வராசா
37. யா/ச/1209 திருமதி. கமலாம்பாள் தில்லையம்பலம்
38. யா/ச/1229 திருமதி. அன்னம்மா இராசதுரை
39. யா/ச/1234 திரு. இலங்கைநாயகம் தசநாயகம்
40. யா/ச/1240 திரு. இராமசாமி சிவப்பிரகாசம்
41. யா/ச/1244 திரு. வேலுப்பிள்ளை தியாகராசா
42. யா/ச/1248 திரு. தில்லையம்பலம் வேலுப்பிள்ளை
43. யா/ச/1252 திரு. வயித்திலிங்கம் சபாரத்தினம்
44. யா/ச/1260 திரு. வயித்திலிங்கம் சபாரத்தினம்
45. யா/ச/1262 திரு. கந்தையா முத்துக்குமாரசாமி
46. யா/ச/1291 திரு. கணபதிப்பிள்ளை தியாகராசா
47. யா/ச/1325 திரு. அருணாசலம் அரியரத்தினம்
48. யா/ச/1344 திருமதி. நாகேஸ்வரி தியாகராசா
49. யா/ச/1345 திரு. அரியபுத்திரர் சிவசம்பு நடராசா
50. யா/ச/1352 திரு. கந்தசாமி மாணிக்கவாசகர்
51. யா/ச/1355 திருமதி. இராசலட்சுமி கந்தையா
52. யா/ச/1397 திரு. கந்தையா இராசையா
53. யா/ச/1440 திரு. கந்தையா கனகலிங்கம்
54. யா/ச/1446 திரு. வேலுப்பிள்ளை தம்பையா
55. யா/ச/1497 திரு. வெற்றிவேலு தயாநாதன்
56. யா/ச/1500 திரு. நாகேசு பேரம்பலம்
57. யா/ச/1521 திரு. கந்தையா சோமசுந்தரம்
58. யா/ச/1547 திரு. கந்தையா வேலாயுதம்
59. யா/ச/1553 திருமதி. லீலாவதி கந்தசாமி
60. யா/ச/1576 செல்வி. கிருபாவடிவு வி'ணுராசா
61. யா/ச/1578 திருமதி. மாணிக்கம் இரத்தினசபாபதி
62. யா/ச/1616 திரு. கதிரவேலு ஆனந்தமயில் நாகலிங்கம்
63. யா/ச/1627 திருமதி. நாகரட்ணம் சொர்ணலிங்கம்
64. யா/ச/1689 திருமதி. இராஜேஸ்வரி கயிலாயநாதன்
65. யா/ச/1733 திரு. பஞ்சாட்சரக்குருக்கள் சண்முகசுந்தரசர்மா
66. யா/ச/1736 திருமதி. நாகம்மா நடராசா
67. யா/ச/1806 திரு. பொன்னையா சிவகுருநாதன்
68. யா/ச/1843 திருமதி. வள்ளியம்மைப்பிள்ளை குமாரசாமி
69. யா/ச/1844 திரு. முத்துவேலு இராசரட்ணம்
70. யா/ச/1851 திருமதி. மங்களகுமாரி தவச்செல்வம்
71. யர்/ச/1905 திரு. சபாபதிப்பிள்ளை கந்தசாமி
72. யா/ச/1914 திரு. மாதவர் கிருஸ்ணர்
73. யா/ச/1916 திரு. சபாபதிப்பிள்ளை கந்தசாமி
74. யா/ச/1922 திரு. ஆறுமுகம் சுப்பையா
75. யா/ச/1989 திரு. வைரமுத்து வடிவேல்
76. யா/ச/2029 திரு. குணரத்தினம் சங்கரப்பிள்ளை
77. யா/ச/2042 திரு. சற்குணானந்தன் கைலாசநாதன்
78. யா/ச/2112 திரு. கதிரவேலு செல்லத்துரை
79. யா/ச/2224 திரு. இலகுப்பிள்ளை ஆறுமுகம்
80. யா/ச/2267 திருமதி. நீலாம்பிகை கனகரத்தினம்
81. யா/ச/2296 திரு. முருகேசு வயித்திலிங்கம்
82. யா/ச/2301 திரு. சரவணமுத்து வீதிவிடங்கன்
83. யா/ச/2304 திரு. நவரத்தினம் சண்முகநாதன்
84. யா/ச/2305 திரு. இராசகாரி பாலசுப்பிரமணியம்
85. யா/ச/2315 திரு. சின்னத்தம்பி செல்வநாயகம்
86. யா/ச/2329 திருமதி. வேதவனம் மயில்வாகனம்
87. யா/ச/2366 திருமதி. பசுந்தரம் சதாசிவம்
88. யா/ச/2369 திரு. சுப்பிரமணியம் நல்லதம்பி
89. யா/ச/2406 திரு. சுப்பிரமணியம் மாணிக்கம்
90. யா/ச/2432 திரு. அம்பலவாணர் வீரவாகு
91. யா/ச/2448 திரு. கணபதிப்பிள்ளை குணரத்தினம்
92. யா/ச/2458 திருமதி. தெய்வானை கந்தையா
93. யா/ச/2488 திரு. சுந்தரம்பிள்ளை வெற்றிவேலு
94. யா/ச/2490 திரு. துரையப்பா பாலசிங்கம்
95. யா/ச/2491 திரு. கந்தப்பு சோமசுந்தரம்
96. யா/ச/2518 திருமதி. யசோதரா தயாபரம்
97. யா/ச/2585 திரு. மாதவர் கனகராஜநாயகம்
98. யா/ச/2604 திரு. வேலுப்பிள்ளை சுப்பையா
99. யா/ச/2627 திரு. சவரிமுத்து விக்ரர் யோசெப்
100. யா/ச/2636 திரு. தம்பிப்பிள்ளை கோவிந்தசாமி
101. யா/ச/2678 திரு. தவசி தர்மலிங்கம்
102. யா/ச/2701 திரு. வேலு குட்டியர்
103. யா/ச/2756 திரு. பெரியதம்பி அப்பாப்பிள்ளை
104. யா/ச/2783 திருமதி. நேசம்மா மாசிலாமணி
105. யா/ச/2802 திரு. சின்னத்தம்பி விசுவலிங்கம்
106. யா/ச/2897 திரு. இராமநாதன் திருநாவுக்கரசு
107. யா/ச/2919 திரு. பொன்னம்பலம் அப்புலிங்கம்
108. யா/ச/2932 திரு. சின்னையா பூலோகம்
109. யா/ச/2950 திரு. கதிரேசு குமாரசாமி
110. யா/ச/2972 திரு. சதாசிவம் இரத்தினசபாபதி
111. யா/ச/2986 திரு. செம்பன் அருணன்
112. யா/ச/2992 திரு. மியாம்பிள்ளை மத்தியாஸ்பிள்ளை மியாம்பிள்ளை
113. யா/ச/2993 திரு. அப்பாத்துரை வைத்திலிங்கம்
114. யா/ச/3000 திருமதி. சரஸ்வதி முத்துக்குமாரசாமி
115. யா/ச/3016 திரு. கார்த்திகேசு முருகேசப்பிள்ளை
116. யா/ச/3018 திரு. கணபதியார் தங்கராசா
117. யா/ச/3032 திரு. சுப்பையா விஜயரத்தினம்
118. யா/ச/3033 திரு. தம்பு செல்லத்துரை
119. யா/ச/3060 திருமதி. பத்தினிப்பிள்ளை கந்தையா
120. யா/ச/3070 திருமதி. இராசேஸ்வரி கயிலாயநாதன்
121. யா/ச/3078 திரு. வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
122. யா/ச/3092 திருமதி. மகேஸ்வரி இராசதுரை
123. யா/ச/3104 திருமதி. அன்னம் சின்னத்துரை
124. யா/ச/3131 திரு. நாகலிங்கம் ஏரம்பமூர்த்தி
125. யா/ச/3222 திரு. வயித்திலிங்கம் துரைச்சாமி
126. யா/ச/3223 திரு. நாகலிங்கம் சிவகுரு
127. யா/ச/3227 திரு. செல்லப்பு குமாரவேலு
128. யா/ச/3250 திரு. மாரிமுத்து பொன்னுத்துரை
129. யா/ச/3288 திருமதி. மகேஸ்வரி சபாரத்தினம்
130. யா/ச/3290 திரு. நாகரத்தினம் சந்திரசேகரம்பிள்ளை
131. யா/ச/3296 திருமதி. மகேஸ்வரி சபாரத்தினம்
132. யா/ச/3306 திரு. வைத்திலிங்கம் அம்பலவாணர்
133. யா/ச/3310 திரு. வயிரவநாதர் சதாசிவம்
134. யா/ச/3314 திரு. மாரிமுத்து நடராசா
135. யா/ச/3338 திருமதி. தங்கேஸ்வரி செல்லத்துரை
136. யா/ச/3350 திருமதி. தங்கச்சியம்மா சிவகுரு
137. யா/ச/3383 திரு. நாராயணபிள்ளை நாகலிங்கம்
138. யா/ச/3390 திரு. முத்துக்குமாரு பூலோகம்
139. யா/ச/3420 திரு. நவரத்தினம் செல்வரத்தினம்
140. யா/ச/3447 திரு. நவரத்தினம் செல்வரத்தினம்
141. யா/ச/3449 திரு். நவரத்தினம் செல்வரத்தினம்
142. யா/ச/3510 திருமதி. திலகவதியார் கந்தசாமி
143. யா/ச/3539 திரு. பொன்னையா சிதம்பரநாதன்
144. யா/ச/3574 திரு. கந்தையா வீரகுமாரன்
145. யா/ச/3617 திரு. முருகையா ஜெகதீசன்
146. யா/ச/3623 திரு. கதிரேசு சிவகுருநாதர்
147. யா/ச/3632 திருமதி. சிவக்கொழுந்து ஸ்ரோரர்
148. யா/ச/3673 திரு. கந்தப்பு சுப்பிரமணியம்
❖பசியில்லாமலிருந்தால், ஒரு ஸ்பூன் மிளகை வறுத்துப் பொடிசெய்து கைப்பிடியளவு துளசி இலையைப் போட்டுக் கொதிக்கவைத்து, சூடு அறியவுடன் தேனில் கலந்து குடித்தால் சரியாகும்.

❖நன்றாய் சளி பிடித்துக்கொண்டு மூக்கு ஒழுகத்தொடங்கினால் மிளகை இடித்து சூரணம் செய்து வைத்துக்கொண்டு தேனில் கலந்து சாப்பிட்டுவர வேண்டும். இரண்டொரு நாட்களில் சரியாகி விடும்.

# அருணபாதம் அருச்சிக்க அழகன் அளித்த அரிய தமிழ்

என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ்செயு மாறே-''



என்று திருமந்திரம் செய்தார் திருமூலர். தமிழ் இனிய மொழி. தமிழ் உலக மொழிகளில் ஒரு நல்ல மொழி.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று பாட்டுக் கொரு புலவன் பாரதி பாடினார்.

கடவுளை அருச்சிப்பதற்கு முருகக் கடவுள் அரிய தமிழைத் தந்தார் என்று அருணகிரிநாதர் ஆனந்தமாகத் திருப்புகழால்

''அருணதள பாதபத்ம மநுநித மேதுதிக்க அரியதமிழ் தானளித்த மயில் வீரா'' எனச்செப்புவார்.

இறையனார் அகப்பொருளிற்கு அரிய உரை செய்த நக்கீரனார், ''தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என மூவகைப்பட்ட சங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள் தலைச்சங்க மிருந்தார் அகத்தியனாரும் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும் குன்றெறிந்த முருக வேளும், ''என்று வரைவதனால் முருகக் கடவுள் சங்கப் புலவர் ஏன்பது பெற்றாம்.

சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாரைத் திருவருள் நோக்கஞ் செய்து, ''நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டே யாகும் '' என்று அருளினர்.

அவை யாவும் முன்னெலாம் தமிழில் பூசை வழிபாடு அருச்சனை தமிழில் நிகழ்ந்தமைக்குத் தக்க சான்று. 'முத்தமிழ் வேதம்' என்பார் திருமந்திரகாரர்.,

இங்கே 'முன்னெலாம், என்று குறிப்பிடும் காலம் 'மொகஞ்ச தாரோ கரப்பா நகர நாகரிகங் களுக்கு முற்பட்ட காலம். அதுவே திருமூலர் தமிழ் [illegible]ர் டலம் ஐந்தும்' என்று கு[illegible] காலம் அந்தக் காலத்தில் உ[illegible]ர் மண்டலமாகிய ஐந்து கண்டங்[illegible]ளிலும் தமிழும் சைவமும் தழைத் தோங்கியது. ஐம்பத்தொரு எழுத்துக் களில் தமிழில் நடந்த காலம் - (16735)

தெய்வத் தமிழ் உலகு அளாவிய மேன்மையை அடிப்படை யாக வைத்தே சேக்கிழார், 'ஞாலம் அளந்த மேன்மைத் தமிழ்' என்று எடுத்துப் பாடுவார்.

'ஞாலம் அளந்த மேன்மைத் தமிழை மீண்டும் ஞாலம் அளக்கச் செய்யும் விருப்பால், பாரதியார், ''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'' என்பார்.

கடைச் சங்கப் புலவர் நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் தமிழில் முருக நாமங்களால் அர்ச்சிக்கும் மறைந்து போன முறைமையை மீண்டும் தொடக்கி வைக்கின்றார். உதாரணத்திற்கு ஓராறு நாமங்கள் இவை:-

''அறுவர் பயந்த ஆறமர் செல்வ ஆல்கெழு கடவுற்புதல்வ, மலை மகள் மகனே, மாற்றோர் கூற்றே கொற்றவை சிறுவ, இழை யணி சிறப்பிற் பழையோற் குழவி-!''

நக்கீரருடைய நல்வழியைக் கடைப்பிடிக்கின்றார் கச்சியப்ப சிவாச்சாரியர். தேவர்கள் தமிழில் முருக நாமங்களால் முருகப்பிரானை வழிபடும் திறத்தினைக் கச்சியப்பர் கந்த புராணத்தில் எடு[illegible]க் காட்டுகின்றார்.

[illegible] நம ஐந்து முகர் தந்த [illegible]சு நம, கங்கை மைந்த நம, பன்னிரு புயத்த நம, நீபமலர் மாலை புனையும் தந்தை நம, ஆறுமுக ஆதி நம, சோதி நம, தற்பரம தாம் எந்தை நம, என்று மிளையோய் நம, குமார நம என்று தொழுதார்.

## வெள்ளிநற்சிந்தனை

### சிவசண்முகவடிவேல்

இமையோர்கள் செந்தமிழால் செவ்வேள் சேஎய்யைச் சேவித்தார்கள் என்பதற்கு திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருடைய திருநெறிய தமிழ்சான்று தரும்''

''கல்லா நிழன்மேய களை சேர் கண்டாவென் றெல்லா மொழி யாலு மிசையோர் தொழு தேத்த (1-85-1)

தன்னைப் பூசிக்கத் தமிழ் தந்த தமிழ்த் தெய்வம் முருகன் - தமிழ் வாழ்க - தமிழ்த் தெய்வம் நம்மைக் காப்பதாக! அவன் புகழ் எங்கும் பூக்கட்டும். □

## தே.போ.ஆ.குழுவின் ஆலோசகர் பதவி விலகினார்

(கொழும்பு)

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆலோசகர் அசோக குணவர்த்தன பதவிவில கியுள்ளார்.

அண்மையில் நாரகன்பிட்டியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் அசோககுணவர்த்தன தொடர்ந்தும் பணிபுரிய முடியாத காரணத்தினாலேயே பதவி விலகு வதாக கூறப்படுகிறது. (க-60)

## புதிய பாதைப் படகு

(ஊர்காவற்று[illegible])

ஊர்காவற்றுறை [illegible]ாரைநகர் களுக்கிடையில் புதிய பாதைப் படகு ஒன்று சேவையில் ஈடுபட வுள்ளது.

இப்பாதைப் படகு விரைவில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

தற்போது பாவனையில உளள பாதைப்படகு சேதமடைந்த நிலையில் இருப்பதனால் பயணிகள் பல அசௌரியங்களை எதிர்நோக்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.(ப-75)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நாவலர் மணிமண்டபத்தில் பி.ப.6.30 மணிக்கு நடாத்தப்பட்டுவரும் ஆன்மீகச் சொற்பொழிவில், இன்று 'திருகைவேல்' எனும் விடயம் பற்றி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தி சிறப்புச் சொற பொழிவாற்றவுள்ளார். (ற-19)

## யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சுக்கு ஜனாதிபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக அதிகரித்துவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை [illegible]க்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளார்.

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக மாவட்ட நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் மதகுருமாருடன் சந்திப்புக்கள் நடாத்தப்பட்டு, அச்சந்திப்புக்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

இதேவேளை, நாளுக்கு நாள் யாழ்.மாவட்டத்தில் வீதி விபத்துக்கள் இடம்பெறுவதுடன், அதிக உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இவற்றைத் தடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் வகையில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ளது.

(து)

## கலாசார விழா

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு பிரதேச செயலக கலாசாரவிழா நாளையும் நாளை மறுதினமும் மானிப்பாய் பிரதேசசபை கலாசார மண்டபத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா தலைமையில் நடைபெறவுள்ளது.

முதலாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமியும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், சண்டிலிப்பாய் முன்னாள் உதவிப் பிரதேச செயலர் ச.செல்வராசா, வலிதென் மேற்கு பிரதேசசபை செயலர் ஏ.யே.விக்ரர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறைப் பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராசாவும், கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல், ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு, யாழ்ப்பாண பாரம்பரிய கலை மேம்பாட்டுக்கழகத் தலைவர் கலாபூசனம் மெற்றாஸ் மயில் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில், சண்டிலிப்பாய் பிரதேசசெயலகத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களது சிறப்பு கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. (ற-19)

## சட்டவிரோத கசிப்பு விற்பனை யாழ்.நீதிமன்றம் 17 பேருக்கு 1,88,000 ரூபா அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் கசிப்பு மற்றும் மதுபானம் என்பவற்றை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட 17 பேருக்கு ஒரு இலட்சத்து 88 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சிறு குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரின் உதவியுடன், கலால் திணைக்கள உத்தியோகத்தர்கள் மேற்படி 17 பேரையும் கைது செய்து கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்ட நீதிமன்றில் நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போதே, நீதிபதி இவர்களுக்கு ஒரு இலட்சத்து 88 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

திருநகரரைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், 5 ஆயிரம் ரூபா தர்மப் பணமும், யாழ்ப்பாணம் மடம்வீதியைச் சேர்ந்த இருவருக்கும், குருநகர், அரியாலை, இராசாவின் தோட்டம் பகுதிகளைச் சேர்ந்த மூவருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 5 ஆயிரம் தர்மப்பணமும் அபராதமாக விதிக்கப்பட்டன.

அத்துடன், யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு, நல்லூர் மற்றும் கொக்குவில் மேற்கு ஆகிய பகுதிகளில் இருந்து கைது செய்யப்பட்ட 10 பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2 ஆயிரம் ரூபா தர்மப்பணமும், குருநகரைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 3 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் அபராதமாக விதிக்கப்பட்டன.(ற-5)

## உலர் உணவு நிவாரணத்திற்கு அரிசியை வழங்க நடவடிக்கை

(புத்தளம்)

வடமாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்து புத்தளம், குருநகல், அநுராதபுரம் மாவட்டங்களில் வாழும் மக்களுக்கு வழங்கப்பட இருந்த உலர் உணவு நிவாரண விநியோகம் அரிசி தட்டுப்பாட்டினால் தாமதமாவதாக கூட்டுறவு சங்கங்கள் அறிவித்துள்ளன.

இதனையடுத்து, வன்னி மாவட்ட அபிவிருத்தி புனர்வாழ்வு அமைச்சர், ரிசாத் பதியுதீன், வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயுடன் நேற்று முன்தினம் தொடர்புகொண்டு விரைவில் நிவாரண விநியோக நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுள்ளார்.

இதனையடுத்து, இம் மக்களுக்கான நிவாரணத்தில் 50 சதவீதம் வெள்ளைப்பச்சை அரிசியையும் மற்றைய 50 சதவீதம் ''சம்பா'' அரிசியையும் வழங்குமாறு, மாவட்ட செயலாளர்கள் ஊடாக பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாணடோ புள்ளே பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேவேளை, கடந்த நான்கு மாதகாலமாக இந்த உலர் உணவு நிவாரணம், மக்களுக்கு வழங்கப்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. (ற-15)

## ஐ.ம.சுதந்திர கூட்டமைப்புக்குள் நிலவும் பிரச்சினைகளை மேடைகளில் பேசத்தடை

(கொழும்பு)

ஜனாதிபதியின் உத்தரவின[illegible] தாம் ஆளும் ஐக்கிய மக்க[illegible] சுதந்திரக் கூட்டமைப்புக்குள் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக கருத்துக்கள் எதனையும் வெளியிட முடியாதுள்ள நிலையில் இருப்பதாக சிறிய மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்குள் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக மேடைகளில் எதனையும் தெரிவிக்க வேண்டாம் என கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி எமக்கு உத்தரவிட்டார்.

முதலில் இதனை அமைச்சரவைக்குக் கொண்டு வந்து சகல அமைச்சர்களுடனும் கலந்துரையாடுமாறும் அவர் கூறினார்.

எமது கூட்டமைப்பின் தலைவர் என்ற வகையில் அவருக்கு நாங்கள் மரியாதை செலுத்த வேண்டும். அதற்கான உயர்ந்த பண்பு எங்கள் கட்சியில் உள்ள அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் உள்ளது.

இந்த நாட்டில் எவ்வளவோ கூட்டமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை அனைத்தும் நிரந்தமான கூட்டமைப்புக்களா? என நாம் எண்ணவில்லை. இது நிரந்தரமாக இருக்கப் போவதில்லை.

அதேபோல் எமது இந்தக் கூட்டமைப்பையும் பாதுகாக்க வேண்டும் என்று நாம் யாரும் நினைப்பதில்லை அவ்வாறிருப்பது தவறு.

எமது கூட்டமைப்பால் நாட்டில் செய்யவேண்டிய பணிகள் சில இருக்கின்றன. அந்தப் பணிகள் நிறைவேற்றப்படாவிட்டால் கூட்டமைப்பு அரசாங்கத்தினால் எதுவித பலனையும் மக்கள் அனுபவிக்கமாட்டார்கள் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (க-121)

## வகுப்புக்கள்

(துன்னாலை)

துன்னாலை ஆட்டுப்பட்டிக் கிராமத்தில் நிகொட் திட்டத்தின் கீழ் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள பொது மண்டபத்தில் அண்மைக்காலமாக சிறுபிள்ளைகளுக்கு மாலை வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. (ப-113,7)

## இன்று ஒரு தகவல்

# இசையும் செடியும்

புல்லாங்குழல் சங்கீதத்தைக் கேட்டுவிட்டு செடி கொடிகள், ஆடு மாடுகள் எல்லாம் மயங்கிப் போவதாக புராண கதைகளில் எல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்போதும் நிஜமாகவே அப்படி நடக்கும் போலிருக்கிறது சார். செடி கொடிகள் தான் சங்கீதத்தை ரசிக்கின்றனவாமே!

“செடி கொடிகளின் மீது இசையின் பரிணாமம் எப்படிப்பட்டது?” என்று ஓர் ஆராய்ச்சி நடந்தது. எங்கே நடந்தது தெரியுமா? இந்தியாவில் தான்! அதுவும் தமிழ்நாட்டில் நடந்த ஆராய்ச்சி இது. சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1962 ஆம் ஆண்டு இந்த ஆராய்ச்சி நடைபெற்றது. அங்கேயிருந்த டாக்டர் டி.சி.சிங்தான் இந்த ஆராய்சியைச் செய்தார். கடைசியில் தாவர இனங்கள் இசையை ரசிக்கின்றது என்று கண்டு பிடித்து விட்டார். ரசிக்கின்றதென்றால் என்ன அர்த்தம்? இது நல்ல சங்கீதம்! இது மோசமான சங்கீதம் என்ற வித்தியாசம் அதற்கெல்லாம தெரிகிறது என்று அர்த்தம். இனிமையான சங்கீதமாக இருந்தால் செடி கொடிகள் மயங்கும். மோசமான, கொடுமையான சங்கீதமாக இருந்தால் தாவரங்கள் நடுங்க ஆரம்பிக்கின்றன.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடந்த இந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து வெளிநாடுகளிலும் இது சம்பந்தமான ஆராய்ச்சி நடந்தது. இல்லினாய்ஸ் ஜே.இ.ஸ்மித் என்ற ஒரு விஞ்ஞானி சில ஆராய்ச்சிகளைச் செய்தார். அவர் இந்த அவரை, மக்காச் சோளம் போன்ற பயிர்களில் ஆராய்ச்சி செய்தார். கடைசியில் என்ன சொன்னார் தெரியுமா? ‘இனிமையான சங்கீதத்தை கேட்ட பயிர்கள் அதிகமாக விளைகிறது. கொடுமையான சங்கீதத்தைக கேட்ட பயிர்கள் குறைவாக விளைகிறது’ என்றார்.

அதுசரி... விவசாயத்தல் விளைச்சலை அதிகப்படுத்துவதற்கு சங்கீதத்தை உபயோகப்படுத்தினால் என்ன?...அதில் ஒரு சிக்கல் அதாவது சங்கீதத்திற்காக நாம் செலவு செய்யும் தொகையை விட அந்த சங்கீதத்தைக் கேட்டு அதனால் விளையும் அதிகப்படியான விளைச்சல் குறைவாகத் தான் இருக்கும்! அதாவது சங்கீதத்தை ஏற்பாடு செய்வதற்காக 100 ரூபா அதிகமான விவசாய செலவு செய்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதனால் நமக்கு அதிகப்படியாக விவசாயத்தில் கிடைக்கும் பணம் 25 ரூபா என்றால் அதனால நமக்கு என்ன பிரயோசனம்? 100 ரூபா செலவு செய்து அதனால் 25 ரூபா. உழைப்பதில் என்ன லாபம்? இருந்தாலும் இதைப்பற்றியெல்லாம் இன்னும் தொடர்ந்து ஆராய்ச்சி செய்ய வேண்டும்?

சில இடங்களில் பால் பண்ணைகளில் இனிமையான இசையைப் போடுகிறார்களாம்... அதைக் கேட்டுவிட்டு அதிகமாக பால் கறக்கிறதாம் ஆடுமாடு, செடி கொடிகள் எல்லாம் இசையை இரசிக்கிறது என்று தெரிந்துவிட்டது. அதனால் இனிமேல் அலடசியமாக அவற்றின் அருகில் நிற்கும் போது ப்பாட்டுப் பாட முயற்சிக்கக் கூடாது. அவற்றிற்கெலலாம் வாய் என்று ஒன்று இல்லாததினால நாம என்ன பாடினாலும் அவை பேசாமல் இருக்கின்றன. சகித்துக் கொண்டு இருக்கின்றன. இருந்தாலும் அவற்றின் மனம் என்ன பாடுபடும்.

அவற்றிற்கு மனது வேறு இருக்கிறதா என்று கேட்கிறீர்களா? இருக்கிறதா சார். தாவரங்களுக்கு வலி,பயம், இன்பம்,துன்பம், விருப்பு,வெறுப்பு இதுபோன்ற நுண்ணிய உணர்வுகள் உள்ளனவாம். இப்போது நான் சொல்லி வைப்பது இது தான்.

அதாவது நாமெல்லாம் இனிமேல் தாவரங்களுக்குப் பக்கத்தில் நின்று கொண்டு பாட்டுப் பாடுவது தவறு. அதுவும் முக்கியமாக தென்னை மரத்திற்கு அடியில் நின்று கொண்டு பாடக் கூடாது. அந்த மரத்திற்கு சகிக்க முடியாத ஒரு நிலை வந்து இனிமேல் தன்னால் தாங்க முடியாது என்ற நிலை வந்து உச்சியிலிருந்து ஒரு தேங்காயைத் தள்ளி விட்டால் நமது நிலை என்ன ஆகும்?

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# அரசியல்வாதிகளால் ஏமாற்றப்பட்ட மலையக சமூகம் எம்மை நாடுகிறது!

## இ.சந்திரசேகரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

மலையகத் தமிழ் அரசியல் தலைமைகள் தொடாந்து மலையகத் தோட்டத் தொழிலாளர் சமூகத்தை ஏமாற்றி வருவதால், அத் தொழிலாளர் சமூகம் ஜே.வி.பியை நாடி வருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினா இரா. சந்திரசேகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சம்பளவுயர்வு விடயத்தில் தோட்டத் தொழிலாளர்கள் மீண்டுமொரு முறை ஏமாற்றப்பட்டுள்ளனர். மலையகத் தலைமைகள் தமது பதவிக்கும் பணத்துக்கும் தொழிலாளர்களைப் பணயம் வைத்துள்ளனர். நோர்வூட் சர்வதேச விளையாட்டு மைதானத்தையும், அட்டன் தொழிற் பயிற்சி நிறுவனத்தையும், இறம்பொடை கலாசார மண்டபத்தையும் மலையகத்திலுள்ள அரசியல் தலைவரொருவர் தமது குடும்ப சொத்தாக மாற்றுவதற்கு முயற்சி செய்து வருகின்றார். இவை மக்களின் சொத் துக்கள் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளவுயர்வுப் போராட்டம் என்ற போில் மலையக மக்கள் முன்னணித் தலைவர் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் துதிபாடிக் கொண்டிருந்தார். மலையகத் தமிழ் மக்களின் உாிமைக்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருடன் பேசும் அவர் வட கிழக்கில் அடிமைகளாக இருக்கும் இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் குறித்து எதனை பேசியுள்ளாா.

பத்திாிகை அறிக்கைகளை விட்டு அரசியல் நடத்தும் இவாகளால் மலையகத் தமிழ் மக்களுக்கு விடிவு கிடைக்கப்போவதில்லை.

மக்கள் விடுதலை முன்னணி இனவாத கட்சியல்ல. ஐக்கிய தேசியக்கட்சி தான் இனவாதக் கட்சியாகும். 1948 ஆம் ஆண்டு முதல் இந்த நாட்டை ஆட்சி செய்து வந்த ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் அவ்வப்போது பல சட்டங்களை இயற்றி தமிழ் மக்களுக்கெதிராக செயறபட்டு வந்தார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும எனறார். (க)

# ஜே.வி.பியினரின் பசப்புவார்த்தையில் மயங்கிய காலம் மலையேறிவிட்டது

## ஐ.தே.க.எம்.பி. நியோமல்பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தலுக்கு முன்னர் அளித்த வாக்குறுதியின் பிரகாரம் அரச ஊழியர்களுக்கு 70 வீத சம்பள உயர்வை வழங்கியே தீர வேண்டும் என்று புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

சிலாபத்தில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் அரச விரோதக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துரைக்கையில், ஜே.வி.பியின் சாயம் இன்று வெழுத்து வருகிறது. அவர்கள் பசப்பு வார்த்தைகளால் மக்களை மயக்கிய காலம் மலையேறிப் போயவிட்டது. இனிவரும் காலம் ஐக்கிய தேசியக் கட்சியின் வசந்த காலமாகும்.

இந்த ஆளும் சுதந்திர முன்னணி அரசை மக்கள் வீட்டுக்கு துரத்தி அடிக்க துடித்துக கொண்டிருக்கின்றனர். அதன் விளை வாகவே இன்று மக்கள் வீட்டை விட்டு வீதிக்கு வந்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி கடந்த ஆட்சிக்காலத்தில் ஆரம்பித்த சமாதான முயற்சியை கிடப்பில் போட்ட இந்த அரசு இன்று தேசிய சமாதானப் பேரவை என்ற பெயரில் நாம் தான் சமாதானத்தின் உண்மையான காவலர்கள் என்று இரட்டைவேடம் பூண முயல்கிறது. இந்த நாட்டை சமாதானம் நிறைந்த சுபீட்சம் மிக்க தேசமாக கட்டியெழுப்பக் கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆவார். அவரது தலைமையில் அடுத்த ஆண்டு ஐ.தே.கட்சியின் ஆட்சி மலர்வது திண்ணம் என அவர் மேலும் தெரிவித்தார். (க-121)

அன்று மக்களுக்காக நீலிக்கண்ணீர் வடித்த ஜே.வி.பி இன்று பதவிகளுக்கு சோரம் போயுள்ளது. வாழ்க்கைச் செவு அதிகரிப்பின் காரணமாக வதைக்கப்பட்டுக் கொணடிருக்கும் மக்களுக்கு எதிர்வரும் 19ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள அரசின் முதலாவது வரவு- செலவுத் திட்டத்தில் உரிய நிவாரணம் அளிக்கப்பட வேண்டும்.

# இராசிபலன்

**05.11.2004 (ஐப்பசி20, வெள்ளிக்கிழமை)**
**அட்டமி மு.இ.10.00 மணிவரை**
**ஆயிலியம் முழுவதும்**
**இராகுகாலம் . 10.35-12.06 மணிவரை**
**சுபநேரம் 06.06-07.35மணிவரை**
**ஐப்பசி வெள்ளி 3ஆம் வாரம்**
**கௌரிவிரதம் 14ஆம் நாள்**

**மேடம்** தெய்வசிந்தை, புதியவிடயம், மனச்சஞ்சலம், காரிய தாமதம்.

**இடபம்** பிரயாண நன்மை, சகோதரர் உதவி, தெய்வ தரிசனம், முயற்சி கைகூடும்,

**மிதுனம்** சிந்தனை மிகுதி, காரிய தாமதம், பணவிரயம், அதிக வார்த்தை.

**கடகம்** பெரியோர் சந்திப்பு, பிரயாண நன்மை, போசன நன்மை, தெய்வசிந்தை.

**சிங்கம்** தொழில் நன்மை, மாதர் நட்பு, இடமாற்றம், வாக்கு மேன்மை.

**கன்னி** கீர்த்தி, தெய்வதரிசனம், முயற்சி கைகூடும், நல்ல வருமானம்.

**துலாம்** உஷ்ணநிலை, தொழில் சிறப்பு, அதிகாரம், உற்சாகம்

**விருச்சிகம்** கட்டுப்பாடு, வீண்பயம், காரிய தாமதம், அதிக செலவு.

**தனுசு** ஆரோக்கியகுறைவு, வாகனபயம் முயற்சி தடங்கல், அபகீர்த்தி.

**மகரம்** தொழில் விருத்தி, கலந்துரையாடல், நல்லசெயல், பெரியோர் தரிசனம்.

**கும்பம்** ஆரோக்கியநிலை, நல்ல முயற்சி, பெரியோர்சந்திப்பு, சத்துருஜெயம்.

**மீனம்** மனச்சஞ்சலம், புதிய கவலை, சொத்துப்பிரச்சினை, காரியதாமதம்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
– வளவன்

# காத்தான்குடியிலிருந்து 1000 பேர் ஆரையம்பதிக்கு இடப்பெயர்வு

(மட்டக்களப்பு)

காத்தான்குடியைச் சேர்ந்த சுமார் 1000 முஸ்லிம்கள் அந்த நகரை விட்டு அச்சம் காரணமாக வெளியேறி அருகிலுள்ள ஆரையம்பதியில் தஞ்சமடைந்துள்ளனர்.

சுமார் 200 குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள் வெளியேறி ஆரையம்பதிக்கு சென்ற போது இவர்களை அங்குளள தமிழ் மக்கள் ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் தங்க வைத்துள்ளனர். இவர்களுக்கு சமைத்த உணவு மற்றும் நீராகாரங்கள் ஆரையம்பதி கிராமத்தைச் சேர்ந்த தமிழ் மக்களால் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் ரவூப் மௌலவியின் மார்க்க நெறியை பின்பற்றுபவர்கள் என செய்திகள் தெரிவிக்கின்றன. காத்தான் குடியில் இடம்பெற்ற கிரனேற் குண்டு வீச்சினை அடுத்து அப்பகுதியில் ஏற்பட்டடுள்ள பதற்ற நிலையை அடுத்தே இவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர். (ந

# விலை கட்டுப்பாட்டுக்குழு கவனம் செலுத்த வேண்டும்

(கல்வியங்காடு)

வர்த்தக நிலையங்களில் விலைப்படடியல் விபரம் பார்வைக்கு வைக்கப்படவேண்டும் என சம்பந்தப்பட்ட தரப்பினரால் அண்மையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

இது சில வர்த்தக நிலையங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு செய்யாதோருக்கு தண்டப் பணம் அறவிடப்படுகிறது.

ஆனால் கல்வியங்காட்டுச் சந்திககும இருபாலைச் சந்திக்குமிடையே உள்ள வீதிகளில் அமைந்துள்ள சில கடைகளில் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகமாகக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் அதிருப்தி தொிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட தரப்பினர் இது விடயததில் கவனம் செலுத்தி அப்பகுதி மக்களின் நலனில் அக்கறை செலுத்த வேணடுமென கேட்கப்படுகின்றனர். (11-7.74)

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது - குறள்

வலம்புரி

# அம்மா அங்கு! தளபதி இங்கு!

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில், இந்தியாவின் போக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றது. இலங்கையில் சமாதானம் ஏற்படுவதை இந்தியா விரும்பவில்லை என்ற உண்மை இதன் மூலம் உறுதிப்படுகின்றது.

சமாதான முயற்சியை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்ற எந்தக் கருத்தையும் இந்தியா இதுவரை வெளியிடவில்லை. அதுமட்டுமன்றி இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் முனைப்புடன் செயலாற்றும் நோர்வே, ஜப்பான் போன்ற நாடுகளை கட்டுப்படுத்துவதாகவும் இந்தியாவின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இந்திய நாட்டின் ஆதரவின்றி இலங்கை இனப் [illegible]ச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்ற பிரமையை இலங்கை அரசு உட்பட சில வெளிநாடுகள் நம்புகின்றன.

உண்மையில் இந்த நம்பிக்கை அர்த்தமற்றதாகும். தனது நாட்டுப் பிரஜைகளுக்கு சுதந்திரம் - உரிமை வழங்க எந்த ஒரு அரசு விசுவாசமாக முன்வருகின்றதோ அதனை எவராலும் தடுத்துவிட முடியாது.

அவ் வகையில், இலங்கை இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை, தமிழ் மக்களின் உரிமையை வழங்க, ஆளும் தரப்பிற்கு உடன்பாடில்லை. இலங்கையை தாமே ஆள வேண்டும் என்பது சிங்கள இனவாதிகளின் நிலைப்பாடு.

இதனால், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்று பேசும்போதெல்லாம் இந்தியாவை வலிந்திழுத்துக் கொண்டு தடைபோடுவதே வழமையான நிகழ்வாகும். இனப்பிரச்சினையை தீர்க்க விருப்பமில்லாமையே இந்தியாவைச் சாட்டுவதற்கான நியாயப்பாடாகும்.

இதனை உலக நாடுகள் சிலவும் நம்புகின்றன. இத்தகையதோர் சூழ்நிலையை தனக்கு சாதகமாக்கிக் கொள்ளும் இந்தியா, விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு பேச்சு நடத்துவதை தடுப்பதில் முனைப்புடன் செய்து வருகின்றது. இதற்காக தனது இராணுவத் தளபதியை இலங்கைக்கு அனுப்பி வைத்து இங்குள்ள இராணுவக் கட்ட[illegible]ப்புப் பற்றி அறிந்து கொள்ளும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது.

இந்திய விமானப் படைத் தளபதி விஜயத்தை அடுத்து இராணுவத் தளபதியின் இலங்கை விஜயம் நடந்துள்ளது. இங்கு இருக்கக்கூடிய விடயங்கள் தான் என்ன? அரசும், விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடித்து வரும் வேளையில் இந்திய விமானப் படைத் தளபதி, இராணுவத் தளபதி என ஒருவர் பின் ஒருவராக இலங்கைக்கு வந்து செல்வதும், இராணுவக் கட்டமைப்பைப் பார்வையிட்டு ஆலோசனை வழங்குவதும் எதற்காக? சமாதான சூழ்நிலை நிலவும் வேளையில் இத்தகைய நடவடிக்கைகள் சமாதான முயற்சியை பாதிக்கும் அல்லவா? இது இந்தியாவிற்கு மட்டும் புரியாமல் போனமை ஏன்?

பாகிஸ்தான் தீவிரவாதிகளை இந்தியாவிற்குள் அ[illegible]ப்புகின்றது. இதனால் இரு நாட்டு உறவும் பாதிப்படையும் என்று எச்சரிக்கை செய்யும் இந்தியாவிற்கு, இலங்கையில் சமாதான சூழ்நிலை நிலவும் போது, தனது நாட்டுப் படைத் தளபதிகளை இங்கு அனுப்புவது சமாதானத்தைப் பாதிக்கச் செய்யும் என்ற விடயம் தெரியாமல் - புரியாமல் போனது தான் ஏனோ!

ஆக அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுக்களை நடத்தி தீர்வுத் திட்டத்திற்கு வந்து விடுவார்களோ என இந்தியா பயப்படுகின்றது. இதனால் தனது படைத் தளபதிகளை இலங்கைக்கு அனுப்புவதுடன் இலங்கை ஜனாதிபதியை தனது நாட்டுக்குள் அழைத்து மந்திராலோசனையும் வழங்குகின்றது.

சுருங்கக் கூறின் அரசு - புலிகள் பேச்சுக்களை முறியடிக்க சந்திரிகா அம்மா அங்கும் இந்திய இராணுவத் தளபதி இங்குமாக அலைகின்றார்கள்.

# நாம் எவரையும் வலுக்கட்டாயப்படுத்தி “கலீமா” சொல்ல வைப்பதில்லை

## ஜாமியத்துல் உலமாசபை மறுப்பு

(மட்டக்களப்பு)

அகில இலங்கை இஸ்லாமிய மெய்ஞானப் பேரவையைச் சார்ந்தவர்களை தாங்கள் வலுக்கட்டாயப்படுத்தி பள்ளிவாசல்கள் ‘கலீமா’ சொல்ல வைப்பதில்லை எனக் காத்தான்குடி ஜாமியத்துல் உலாமா சபை கூறுகின்றது.

இது தொடர்பாக அகில இலங்கை இஸ்லாமிய மெய்ஞானப் பேரவை ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள கூற்றை ஜாமியத்துல் உலாமா சபை செயலாளர் அல் ஹாஜ் யு.எல்.எம். ஹாரிஸ் மௌலவி ஏற்க மறுத்துள்ளார்.

இதுதொடர்பாக கருத்து வெளியிடுகையில், அகில இலங்கை இஸ்லாமிய மெய்ஞானப் பேரவை சாந்தவர்கள் சொந்த விருப்பத்தின் பிரகாரம் தான் எமது பள்ளிவாசல்களுக்கு வந்து தமது கடந்த கால தவறை உணர்ந்து கலீமா சொல்லி எங்களுடன் இணைந்து கொள்கின்றார்கள்.

கடந்த இரண்டு நாட்களில் 500ற்கும் மேற்பட்டவர்கள் இணைந்துள்ளார்கள் மேலும் பலர் இணையவிருக்கின்றார்கள் எனக் கூறியுள்ளார். இது ஒருபுறமிருக்க காத்தான் குடிப்பகுதியில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற பின்பு நேற்று முன்தினம் இரு பிரிவினரும் முதற்தடவையாக நேரில் சந்தித்துள்ளார்கள்.

காத்தான்குடிப் பொலிஸ் நிலையத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மஹேஸ் சமரதிவாகர தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. (க)

இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர்

# ஜே.என்.டிக்ஷித்துடன் யசூசி அகாஷி பேச்சு

இலங்கைக்கான ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி தமது இலங்கை பயணத்தை முடித்துக்கொண்டு ஜப்பான் செல்லும் வழியில் புதுடில்லிக்குச் சென்றார்.

கடந்த செவ்வாய்க்கிழமை புதுடில்லி சென்ற அகாஷி இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என். டிக்ஷித்தையும் இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் சாந்தர்ன்னையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

தமது இலங்கைப் பயணத்தின் போது விடு தலைப் புலிகள் மற்றும் அரசாங்கத் தரப்பினருடன் நடாத்தப்பட்ட சந்திப்புக்கள் குறித்தும் அவற்றில் எடுக்கப் பட்ட தீர்மானங்கள் குறித்தும் இந்திய தரப்புக்கு அகாஷி விளக்கமளித்துள்ளா. (ச-121)

# யாழ்.சிறி நாகவிகாரையில் கட்டின புண்ணிய நிகழ்ச்சி







யாழ்ப்பாண நாகவிகாரையில் வருடாந்த பெரும் கட்டின புணணிய சமய நிகழ்ச்சி 9 ஆவது தடவையாக கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை விகாரையின் பிரதம தேரர்மிகவஜவுரே குணரத்னவின் தலைமையில், நடைபெற்றது. இந்த புண்ணிய நிகழ்வில் கலந்துகொள்ள மாத்தறை பிரதேசத்தில இருந்து அதிகமான தேரர்கள் வருகை தந்திருந்தனர்.

இக்கட்டின புண்ணிய சமய நிகழ்வு, 51ஆவது படைப் பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் யூவிஎல் பெர்ணான்துவின் மேற்பார்வை, வழிகாட்டலின் கீழ் படைப்பிரிவிற்கு உட்பட்ட சகல படையணியினராலும், படைப்பிரிவினரினாலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இரு நாட்களாக நடைபெற்ற இந்நிகழ்வில் மிகவும் அலங்காரமாக பெரெகரா ஒன்று சேனைய தலைமையகத்தில் இருந்து, நாகவிகாரை சென்றடைந்தது.

இப்புண்ணிய சமய நிகழ்வுக்கு சகல அதிகாரிகளும், சகல சிப்பாய்களும், பக்தி உள்ளத்துடன் பங்காற்றியதுடன் இதில் நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் சேனாதிபதி உட்பட உயர் அதிகாரிகளும் சிப்பாய்களும் கலந்துகொண்டார்கள். (ற)

# இந்திய இராணுவத் தளபதி பாதுகாப்பு அமைச்சருடன் சந்திப்பு

நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய இராணுவத் தளபதி நிர்மல்சுந்தர்விச் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

புத்தசாசன அமைச்சில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் இராணுவத் தளபதி சாந்தகொட்டேகொடவும் கலந்துகொண்டார்.

இதன்போது இரண்டு நாடுகளுக்கிடையிலான இராணுவ ஒத்துழைப்புக்கள் குறித்து ஆராயப்பட்டது. இந்திய இராணுவத் தளபதி கார்கில் யுத்தம் தொடர்பான நூல் ஒன்றினையும் இச் சந்தர்ப்பத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் வழங்கினார். (ர-121)

# பொலிஸாரின் அசிரத்தையால் அப்பாவி பொதுமகன் அவதி

(துன்னாலை)

சாரதி அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற நபர் ஒருவர் பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டபோது, பொய்யான பெயர் விபரங்களைப் பதிவு செய்து குற்றத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இதனை நம்பி அவ்விபரத்தின் அடிப்படையில் நீதிமன்றத்தில் வழக்குத தாக்கல் செய்த பொலிஸார் அழைப்புக் கடடளையை அனுப்பியபோதே அவரது ஏமாற்றுவேலை தெரியவந்தது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பிரஸ்தாப நபர், பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டவேளை தேநீர் கடை நடத்தும் வேறு ஒருவரின் பெயர் முகவரியையே பொலிஸாருக்குக் கொடுத்துள்ளார்.

இதன்படி அத் தேநீர்க்கடை உரிமையாளருக்கு நீதிமன்ற அழைப்புக்கடடளை அனுப்பப்பட்ட போது அதைப் பெற்றுக்கொண்டவர் சம்பவத்தை உணர்ந்து அறிந்து அதிர்ச்சி அடைந்தார்.

பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டவரின் கடுமையான முயற்சியால் பின்னர், பிரதேச செயலகம் வழங்கிய தகவல்களின் உதவியுடன் குறித்த நபர் இனங்காணப்பட்டார்.

கரவெட்டி மத்தியைச் சேர்ந்த இச்சம்பவத்தின் சூத்திரதாரியினது அடையாள அட்டையை பொலிஸார் பரீட்சிக்காது அவர்கொடுத்த விபரங்களைப் பதிவுசெய்து தனக்கு அழைப்புக் கட்டளை அனுப்பியது எந்தவகையில் நியாயமென பாதிக்கப்பட்டவா கேள்வி எழுப்பியுள்ளார். (ப-104)

# முத்தையா முரளிதரன் தங்கனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்டத்தின் நல்லெண்ணத் தூதுவராக நியமிக்கப்பட்டுளள முத்தையா முரளிதரன், தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுபபாளர் சோ.தங்கனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.45 மணியளவில் தமிழீழ அரசியல்துறை செயலகத்தில் இச சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, அன்றையதினம் பூநகரிப் பிரதேசத்தில் நடைபெற்ற கலநதுரையாடல் ஒன்றிலும் முரளிதரன் கலந்துகொண்டார்.

பூநகரி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் சுவிஸ் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர், நெதர்லாந்து உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதி, சிறான் திட்ட ஆலோசகர் மற்றும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதி ஆகியோர் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (ற-121)

# தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

உங்களிடம் உள்ள எல்லா அறிவும் எப்படி வந்தது? தியானத்தின் சக்தியால்தான். தன் ஆழங்களில் இருந்த அறிவை ஆன்மா தானாகவே கடைந்தெடுத்தது. அதற்கு வெளியில் எந்த அறிவாவது உள்ளதா? இறுதியில் தியானத்தின் சக்தி நம்மை உடம்பிலிருந்து பிரிக்கின்றது. அப்போது ஆன்மா தன்னை உள்ளது உள்ளபடி அறிகிறது. தான் பிறக்காத பிறப்பற்ற இறப்பற்றதாக உணர்கிறது. இனி எந்தத் துன்பமும் இல்லை. உலகில் பிறப்பும் இல்லை. பரிணாம வளர்ச்சியும் இல்லை. தான் என்றென்றும் பரிபூரணமாக இருந்ததை சுதந்திரமாக ஆன்மா அறிகிறது.

சுவாமி விவேகானந்தர்

# மிருசுவில் படுகொலை வழக்கு நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது

மிருசுவில் மனிதப் படுகொலைகள் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று மீண்டும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் "ட்ரயல் அட்பார்" முறையில் ஆரம்பமானது.

19.12.2000 ஆம் ஆண்டு விறகு வெட்டச் சென்ற 14 வயது சிறுவன் உட்பட 8 பேரை வெட்டிப் படுகொலை செய்து புதைத்ததாக குற்றஞ்சாட்டி இராணுவத்தைச் சேர்ந்த சுனில் ரத்நாயக்கா, சேனக முனசிங்க, ரி.எம்.ஜயரத்ன, சமன் புஷ்பகுமார, காமினி முனசிங்க ஆகிய 5 பேர் மீது சட்டமா அதிபரினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதிலும் மேல் நீதிமன்ற நீதிபதியொருவர் உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பதவியேற்றதையடுத்து இந்த விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணைக்காக மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய தலைமையிலான நீதிபதிகள் குழுவில் உபாலி அபயரத்ன, சிசிற அபயகுணவர்தனா ஆகியோர் இடம்பெற்றுள்ளார்கள்.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சாட்சிகளுக்கு அழைப்பாணை விடுக்குமாறு உத்தரவிட்ட நீதிமன்றம் எதிர்வரும் மே மாதம் 22 ஆம் திகதிக்கு விசாரணையை ஒத்திவைத்ததோடு அதுவரை எதிரிகளை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டது. (ச)

## இந்திய இராணுவத் தளபதி நேற்று நாடு திரும்பினார்

(கொழும்பு)

நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வந்திருந்த இந்திய இராணுவத்தளபதி நிர்மல் சுந்தர்விஜ் நேற்று அதிகாலை நாடு திரும்பினார்.

அவரின் இலங்கை விஜயத்தின்போது இராணுவத்தளபதி சாந்த கொட்டேகொட, முப்படைகளின் பிரதம அதிகாரி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப் படை தளபதி டொனால்ட் பெரேரா மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் ஆகியோரையும், அத்துடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமராவ் ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை தெரிந்ததே.

இலங்கை இராணுவத்தளபதி சாந்த கொட்டேகொடவின் அழைப்பின் பேரில் இவ்விஜயம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று முன்தினம் வவுனியா அனுராதபுரம் பகுதிகளுக்கும் இந்திய இராணுவத்தளபதி விஜயம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-121)

## இலங்கையரை விடுவிக்கும் முயற்சியில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை

(கொழும்பு)

ஈராக்கில் தீவிரவாதிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கையரான தினேஷ் தர்மேந்திராவை விடுவிப்பதற்கு இலங்கை அரசாங்கம் தீவிரமான இராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டுள்ள போதிலும் இதுவரை ஆக்கபூர்வமான முடிவுகள் எதுவும் கிடைக்கவில்லை.

ஈராக்கில் மேற்படி இலங்கையரை கடத்தி வைத்திருக்கும் தீவிரவாத இயக்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளும் முயற்சியில் குவைத் மற்றும் லெபனானில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் ஈடுபட்டுவருவதாகவும், ஆனாலும் இதுவரை குறிப்பிட்டுக் கூறக்கூடிய முன்னேற்றங்கள் ஏற்படவில்லை என்று கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சின் உயர்மட்ட வட்டாரங்கள் கூறின.

இதற்கிடையே மற்றுமொரு இலங்கை இளைஞர் ஒருவர் ஈராக்கில்ட் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டதாக நேற்றுமுன்தினம் செய்திகள் வெளியான போதும் அவை தவறான செய்திகள் என்றும், அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதற்கிடையில் தீவிரவாதிகளுடன் தொடர்பை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகள் குறித்து குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகம் அவ்வப்போது வெளிநாட்டு அமைச்சுக்கு அறிவித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வு இன்று நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வு இன்று நாவலர் கலாசார மண்டபத்தில் பி.ப 2.30 மணிக்கு யாழ். மாநகரசபையின் செயலாளர் சி.வே.குலநாயகத்தின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு கிழக்கு மாகாண உளளூராட்சி திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.இராமலிங்கம், யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, யாழ் மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

உள்ளூராட்சி வாரத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்குவதுடன் யாழ்.மாநகரசபையின் இசைக் கலைஞர்களால் இசைநிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளன. (கு-5)

## வட-கிழக்கு ஆளுநர் நேற்று யாழ். பொது நூலகத்திற்கு விஜயம்

### நூலக குறைநிறைகள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணத்திற்கு இரகசிய விஜயம் மேற்கொண்டிருந்த வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜயவர்த்தன நேற்று யாழ். பொது நூலகத்தைச் சென்று பார்வையிட்டுள்ளார்.

யாழ்ப்பாண அரச அதிபர் உட்பட்ட அரச அதிகாரிகளுடன் சென்ற அவர், அங்கு நிலவும் குறைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார். நூலகத்தைப் பராமரிக்க மாதம் ஒன்றுக்கு 5 இலட்சம் ரூபா தேவையான போதிலும் மாநகர சபைக்கு போதிய வருமானம் இல்லாமை குறித்தும் அதிகாரிகளால் ஆளுநருக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுவிடயம் குறித்து தாம் பரிசீலிப்பதாக ஆளுநர் அதிகாரிகளிடம் தெரிவித்தார் (த-08)

## செயலமர்வு பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயத்தில் இன்று நடைபெறவிருந்த தரம் 7 ஆங்கில மொழி மூல சமூகக் கல்விப் பாடத்திட்டச் செயலமர்வு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இச்செயலமர்வு இன்று தொடக்கம் நாளை மறுதினம் 7ம் திகதி வரை நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

செயலமர்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார். (ச)

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கான இயக்கத்தின் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களின் நடவடிக்கை குழு இன்று விசேட கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள ஒக்ஸ்பாம் அலுவலகத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையை வடபகுதி ஒக்ஸ்பாம் திட்ட ஒருங்கிணைப்பாளர் மார்ட்டின் லின்டர் நிகழ்த்துவார்.

ஒக்ஸ்பாம் நிகழ்ச்சிப் பிரதிநிதி பில் எஸ்.மொண்டி மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி தமிழினி மகளிரும் யாழ்ப்பாண அபிவிருத்தியும் அமைப்பின் தலைவி திருமதி சறோஜா சிவச்சந்திரன் மாகாண நடவடிக்கை குழு உறுப்பினர்களான யசோதரன், பி.நரசிங்கம், செல்வி லோஜி, செல்வி சுகிர்தா, அன்னை இல்லப் பணிப்பாளர் வணபிதா றெஜினோல்ட் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைகளை நிகழ்த்துவார்கள். (க)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் வீதிவிபத்துக்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று பி.ப. 2.30 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ் மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட வீதி அதிகாரசபை, யாழ்.மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்களம், வடபிராந்திய போக்குவரத்துச் சபை தலைவர், தனியார் போக்குவரத்துச் சங்கத்தலைவர், பிரதேச செயலர்கள், யாழ் மாவட்ட பொலிஸ்மா அதிபர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (க-19)

## ரிச்சர்ட் ஆர்மிடேஜ்ஜின் இலங்கை விஜயம் ரத்து

அமெரிக்கப் பிரதி இராஜாங்க செயலாளர் றிச்சர்ட் ஆர்மிடேஜ்ஜின் இலங்கை விஜயம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத காரணத்தினாலேயே விஜயம் ரத்துச் செய்யப்பட்டதாக இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது. (க)

## குடும்பஸ்தர் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(இணுவில்)

இணுவில் கிழக்கு, இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு பாடசாலை வீதியிலுள்ள வீட்டுக் கிணற்றிலிருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இணுவிலைச் சேர்ந்த நடராசா மகேஸ்வரன் (வயது 55) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் இரவு கிணற்றில் வீழ்ந்த இவரை காணாது தேடிய குடும் தினர் காலையில் கிணற்றில் சடலமா கண்டனர். சம்பவ இடத்திற்குச் சென்ற மல்லாக நீதிமன்ற பதில் நீதிவான் இ.இந்திரசேனா மரண விசாரணைகளை மேற்கொண்டார். (க-122)

## நோர்வே வெளிவிவகார அமைச்சர்...

திக்கவுள்ளார்.

அரசும் விடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுவதற்குத் தடையாகவுள்ள காரணிகள் குறித்தும் அதனை அகற்றி, சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது குறித்தும் கருத்தறிவது அவரது விஜயத்தின் நோக்கம் என நோர்வே அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை ஜான் பிற்றர்சன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை செப்ரெம்பர் மாதம் 23 ஆம் திகதி நியூயோர்க்கிலும், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை ஒக்டோபர் 20 ஆம் திகதி ஒஸ்லோவிலும் சந்தித்ததாக நோர்வே வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின்போது இருதரப்பினரதும் நிலைப்பாட்டைத்தான் அறிந்துகொண்டதாகவும், எனினும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்குமுன் இன்னும் சிலவிடயங்கள் குறித்து அறியவேண்டியுள்ளதால் பீற்றர்சன் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக நோர்வே வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை விஜயத்தை உயர்ந்த எதிர்பார்ப்புக்கள் ஏதுமின்றி மேற்கொள்வதாக பீற்றர்சன் தெரிவித்துள்ளார். (ச)

## கருணா அணிக்கு...

சென்று கருணா அணியில் சேர்க்க முற்பட்டதாக கூறப்படுகின்றது. கிராம மக்களால் நையப்புடைக்கப்பட்ட நபரை வெலிக்கந்தப் பொலிஸார் மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை கட்டுவன்வில கிராமத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இவ்வாறு குறித்த நபர் வேலை பெற்றுத் தருவதாக கூறி அழைத்துச் சென்றவர்கள் எவராவது இருந்தால் அது குறித்து உடன் முறைப்பாடு செய்யுமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (10)

## தனித்தரப்பு...

சகல எம்.பிக்களுக்கும் கடிதம்மூலம் அறிவித்துள்ளார்.

முஸ்லிம்களின் தனித்தரப்புக் கோரிக்கை தொடர்பாக சமாதான ஆலோசனைச் சபையின் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக அதன் செயலாளர் நாயகம் ஜயந்த தனபால அமைச்சர் பௌசிக்கு அறிவித்ததையடுத்தே இந்தக் கூட்டத்தை அமைச்சர் பௌஸி கூட்டவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆலோசனை சபையின் நிகழ்ச்சி நிரலில் முஸ்லிம்களின் தனித்தரப்பு கோரிக்கை கருத்தில்கொள்ளப்படும் பட்சத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதற்கு ஆதரவு வழங்கும் என ரவூப் ஹக்கீம் ஏற்கனவே தெரி வித்திருந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது. (ச-10)

## பலதரப்பட்ட...

ஆராயப்பட்டுள்ளது. இவர்களுடனான சந்திப்பின்போது இலங்கை வெளிவிகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், மின்சக்தி எரிச்சக்தி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த ஆகியோரும் உடனிருந்தனர்.

இதன்போது, மீனவர்கள் பிரச்சினை குறித்தும், சேதுசமுத்திர கால்வாய்த் திட்டம் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், முன்னாள் பிரதமர் வாஜ்பாய், பாதுகாப்புத்துறை அமைச்சர் பனாப் முகர்ஜி மற்றும் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாகாந்தி ஆகியோரை ஜனாதிபதி இன்று சந்தித்துபேசவுள்ளார்.

ஜனாதிபதி தனது இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்புவார் (ச)

நாதன்ஸ் சினிமா
DENNIS HOPPER'S
TYCUS
(ஆங்கிலப் படம்)
தினசரி 4 காட்சிகள்
மு.ப. 10.00, பி.ப. 2.00, 6.00
இரவு 8.00 (சி-675)

## நாவற்குழி பாலம்...

இதன்போது மீசாலையைச் சேர்ந்த என்.இரத்தின சபாபதி (வயது 53), கொழும்பைச் சேர்ந்த நவரத்தினம் அருந்தவமலர் (வயது 44), கொக்குவிலைச் சேர்ந்தவர்களான அன்னப்பொடி பேச்சியம்மா (வயது 73), மா.செல்லம்மா (வயது 62) ஆகிய நால்வரும் படுகாயமடைந்தனர்.

இதேவேளை தடம்புரண்ட மினிபஸ் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பாரம் தூக்கி மூலம் தூக்கப்பட்டது. இதன்போது சில நிமிட நேரம் ஏ-9 பாதையூடான போக்குவரத்து தடைப்பட்டது.

இதேவேளை அண்மைக்காலமாக நாவற்குழிப் பகுதியில் வாகனங்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாவது குறிப்பிடத்தக்கது. (ச-05,19,47)

## கோமா நிலைக்கு...

75 வயதான யசீர் அரபாத் கடந்த 24 மணிநேரத்தில் ஏற்கனவே இரு தடவை சுயநினைவை இழந்து பின்னர் உணர்வு பெற்றதாகவும், தற்போது மூன்றாவது தடவையாகவும் சுயநினைவை இழந்துள்ளதாகவும் அல்-ஜசீரா தொலைக்காட்சி அறிவித்துள்ளது. இன்று பலமுறை அவர் வாந்தியெடுத்ததாகவும், அதனைத் தொடர்ந்து அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரபாத்திற்கு இரத்தப்புற்று நோய் ஏற்பட்டிருக்கலாமென தாம் சந்தேகிப்பதாக பிரான்ஸ் மருத்துவக் குழு தெரிவித்துள்ளது. (த-08)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.